# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 05 வெள்ளிக்கிழமை (21-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:358


## மாவீரர் அலங்கார வளைவுகள் நிறுவ படையினர் தடுப்பதாகக் குற்றச்சாட்டு!

### கண்காணிப்புக்குழு முன்னிலையில் இதுபற்றிக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.21

மாவீரர் நாளை முன்னிட்டு குடாநாட்டு வீதிகளில் அலங்கார வளைவுகளை அமைப்பதை படையினர் தடுத்து வருகின்றனர் என எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் நேற்றுக் காலை கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், இராணுவ மற்றும் பொலீஸ்அதிகாரிகள், கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

நேற்றுமுன்தினமிரவு மீசாலைப் பகுதியில் மாவீரர் நினைவாக பொதுமக்களால் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டன. இதன்போது அவ்விடத் (14ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சிவார நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இன்று ஆரம்பம்

### வீதிகள் எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள்

யாழ்ப்பாணம்,நவ.21

எதிர்வரும் 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் மாவீரர் தினத்துக்கு முன்னோடியாக மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் இன்று உணர்வுபூர்வமாக ஆரம்பமாகின்றன.

குடாநாட்டில் கோப்பாய், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்று காலை விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தேசியக் கொடியேற்றல், பொதுச் சுடர் ஏற்றல், மலர் அஞ்சலி ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

பொது அமைப்புக்கள், பொது (14ஆம் பக்கம் பார்க்க)

### சமாதானம், பொருளாதாரம், மக்கள் நலன் கருதி

# ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே ஒப்பந்த அடிப்படையில் செயற்பாடு!

## லியம்பொக்ஸ் உடன்பாட்டை சுட்டிக்காட்டுகிறார் ஜீ.எல்.பீரிஸ்
## நான்கு உயர் அதிகாரிகள் குழு முயற்சியில் நல்ல முன்னேற்றம்



கொழும்பு,நவம்பர்21

சமாதானம், பொருளாதாரம், நாட்டு மக்களின் நலன் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு ஜனாதிபதியும் பிரதமரும் ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைந்து செயற்படும் அறிகுறிகள் தோன்றத் தொடங்கியுள்ளன. முன்னர் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த ரணிலுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட லியம்பொக்ஸ் உடன்படிக்கையை நேற்றைய ஊடகவியலாளர்கள் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார் அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

இரு தலைவர்களும் இணைந்து செயற்படுவதற்கு வேண்டிய வழிமுறைகள், ஒழுங்குகள் ஆகியவை பற்றி ஆராய்ந்து அறிக்கை

குழுவின் நடவடிக்கைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை யும், பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்துவது தொடர்பாக மலிக்கித்த வெல குழு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகின்றது. இன்னும் சில தினங்களில் ஜனாதிபதியும் பிரதமரும் மீண்டும் கூடி இறுதித் தீர்மானம் ஒன்றை மேற்கொள்வர் என்றும் அமைச்சரவைப் பேச்சாளரும் அரசியலமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கூறினார்.

நேற்று நாடாளுமன்றக்குழு அறையில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பீரிஸ் (14ஆம் பக்கம் பார்க்க)



## அரசியல் மோதல் நீண்ட காலம் நீடித்தால் போர் நிறுத்தம் ஆபத்துக்கு உள்ளாகும்!

### நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் எச்சரிக்கை

ஒஸ்லோ,நவ.21

இலங்கையில் தனது சமாதானப் பணியை மீண்டும் ஆரம்பிக்க விரும்புவதாக நோர்வே கடந்த புதனன்று தெரிவித்தது. ஆயினும், விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்தத்தையும் வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படுவதற்கான உறுதி மொழிகளையும் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி அச்சுறுத்துவதால் காலம் ஓடிக்கொண்டிருக்கின்றது என்றும் நோர்வே எச்சரித்திருக்கிறது.

நோர்வேயின் சமாதானப் பணியை இடைநிறுத்தியிருக்கும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெலகிஸன் 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்திடமே இவற்றைத் தெரிவித்திருக்கி (14ஆம் பக்கம் பார்க்க)

## திடீர் அரசியல் நெருக்கடி பட்ஜட்டில் முழுமை இல்லை



### வருத்தம் தெரிவிக்கிறார் பிரதமர்

கொழும்பு,நவ.21

நாட்டில் திடீரென ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியால் அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் உரிய நிவாரணத்தை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியாமல் போனது வருத்தத்துக்குரிய விடயமாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றிய ஆணையர் திங்களன்று இலங்கை வருகிறார்!

### பிரபாவையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்

கொழும்பு,நவ.21

சமாதான முயற்சிகளை முன் நகர்த்துவதற்கான பேச்சுக்களை நடத்துவதற்கென ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார உறவுகள் பிரிவின் ஆணையாளர் சிறிஸ் பற்றன் எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கை வருகிறார்.

மூன்று தினங்கள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர், எதிர்வரும் 26 திகதி கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் சந்திப்பார் என ஐரோப்பிய ஒன்றியத்தின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட் (14ஆம் பக்கம் பார்க்க)

### ✷ யுத்தநிறுத்தத்தைப் பேணுங்கள் ✷ மக்கள் மனதை வெல்லுங்கள்

## மட்டு.மாவட்டப் படை அதிகாரிகளுக்கு முப்படைத் தளபதிகள் நேரில் அறிவுறுத்து

யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து அனுசரித்து செயற்படுமாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முப்படைகளின் முகாம் பொறுப்பதிகாரிகளை முப்படைகளின் தளபதிகள் அறிவுறுத்தியுள்ளனர். நேற்று முன்தினம் அவர்கள் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர்.

20 மாத காலமாக போர் நிறுத்தத்துடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு படையின் ஒத்துழைப்பு வழங்கியமைக்கு முப்படைத் தளபதிகள் நன்றியும், பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பொதுமக்களின் மனதை வென்றெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு (14ஆம் பக்கம் பார்க்க)





சில நிமிடங்களில் நீங்களும் லைப் லோனை பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு அருகிலுள்ள NSB கிளைக்கு விரையுங்கள்.

லைப் லோன் | NSB

# புலிகளின் மாவீரர் தினத்தை முன்னிட்டு ஞாயிறன்று திருமலையில் எழுச்சிப் பேரணி

## சிரமதானப்பணிகள், இலக்கியப் போட்டிகள் நடைபெறும்

திருகோணமலை,நவ.21

விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் எழுச்சிப் பேரணி ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த எழுச்சிப் பேரணியில் முச்சக்கர வண்டிகளே பங்குபற்றும்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு திருகோணமலை உட்துறைமுக வீதியில் உள்ள இந்து கலாசார மண்டப வளாகத்தில் இருந்து முச்சக்கர வண்டிப் பேரணி ஆரம்பமாகும். பேரணி மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்று திரும்பவிருக்கின்றது என்று புலிகளின் மாவட்ட அரசியல் பணிமனையும், மாவீரர் செயற்பாட்டுக் குழுவும் அறிவித்துள்ளன.

இதனிடையே, மாவீரர் தின நிகழ்வுகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் மாவீரர் நினைவு நாள்கள் அனுஷ்டிக்கும் போது வீதிகள், தெருக்கள் என்பவற்றைத் துப்புரவாக வைத்திருக்கும்படியும் மாவீரர்களை நினைவுறுத்தும் முகமாக அவர்களின் திருவுருவப்படங்களை வைத்து அஞ்சலி செலுத்தும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று தினங்களிலும், தாயக மண் மீட்புக்காக உயிர்நீத்த திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 525 மாவீரர்களின் உருவப்படங்கள் இந்து கலாசார மண்டபத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும். 25 ஆம் திகதி மாலை 8.30 மணிக்கு தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் நினைவு நிகழ்வுகள் ஆரம்பமாகும். 27 ஆம் திகதி மாலை 6.35 மணிக்கு வடக்கு, கிழக்கில் சமகாலத்தில் அனைத்து ஆலயங்களிலும் மணிகள் ஒலிக்கப்படும். அதனைத் தொடர்ந்து அகவணக்கமும் பின்னர் ஈகச்சுடர் ஏற்றலும் நடைபெறும்.

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர்தின நினைவுரை நிகழ்ச்சியை திருமலை மக்கள் காணவும் செவிமடுக்கவும் இந்து கலாசார மண்டப வளாகத்தில் செய்மதி தொலைக்காட்சி ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே, பொது வைத்திய சாலையிலும் அதனை அண்டிய சேமக்காலையிலும் இவ்வாரம் சிரமதானப் பணிகள் மக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படும்.

மாணவர்களுக்கிடையிலான இலக்கியப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. பிரதான நிகழ்வு மூதூர் கிழக்கு சேனையூரில் நடைபெறும். கூனித்தீவு, பாட்டாளிபுரம், பள்ளிக்குடியிருப்பு, இறால்குழி, தம்பலகாமம், நிலாவெளி ஆகிய பிரதேசங்களிலும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (எ-3)



நல்லாட்சியும் வரவு - செலவில் பால்நிலை வேறுபாடு பற்றிய ஆய்வுப் பட்டறை கடந்த புதன் அன்று யாழ். அகவொளி நிலையத்தில் நடைபெற்ற போது அலஜி லங்கா அமைப்பின் தலைவர் சுசில் சிறிவர்த்தன உரையாற்றுவதையும் பட்டறையில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம்.

*(அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# ஏழு இராணுவ மேஜர்களுக்கு ஜனாதிபதி சேவை நீடிப்பு!

கொழும்பு,நவ.21

இராணுவத்திலுள்ள ஏழு மேஜர் ஜெனரல்களின் பதவிக்காலத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நீடித்துள்ளார். உயர் நீதிமன்றம் அண்மையில் வழங்கிய ஒரு தீர்ப்பின்படி இந்த ஏழு மேஜர் ஜெனரல்களின தும் பதவிக்கால நீடிப்பு செல்லுபடியற்றதாகியிருந்தது.

மேஜர் ஜெனரல்களான எஸ்.சி. ஆர்.குணவர்த்தன, எஸ்.எச்.எஸ். கொட்டேகொட, ஏ.எம்.சிடடபிள்யூ.பி. செனவிரத்ன, ஜி.எஸ்.சி.பொன்சேக்கா, எம்.டி.எஸ்.சந்திரபால, என்.மல்லவாரச்சி, டி.எஸ்.கே.விஜேசூரிய ஆகியோரின் பதவிக்காலங்களே நீடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த சேவை நீடிப்பு ஒரு வருடத்துக்கு அல்லது அவர்கள் 55 வயதை அடையும் வரை செல்லுபடியாகும் என்று நடவடிக்கை தலைமைச் செயலகம் நேற்று அறிவித்தது.

### சமூக மேம்பாட்டு விழா

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் சமூக மேம்பாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தலைவர் கந்தையா இராசரத்தினம் தலைமையில் சங்கானை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலர் சீ.ஏ.மோகனாஸ், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.கனேசமூர்த்தி, சங்கத்தின் கொத்தணித் தலைவர் க.மெய்யழகனும் கலந்து கொள்வர். (எ-29)

## காணாமற்போனோர் ஆட்கொணர்வு மனு விசாரணை:

# அரசதரப்பு ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கு காலக்கெடு

யாழ்ப்பாணம்,நவ.21

படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்கள் சம்பந்தமான வழக்குகள் தொடர்பாக அரச தரப்பினர் தமது ஆட்சேபனைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 19ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவேண்டும் என்று யாழ்.மேல் நீதிமன்ற நீதிவான் கே.பி. வரதராஜா உத்தரவிட்டார்.

குடாநாட்டில் 1996-1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்களில் மைக்கல் பேர்னாட் ஜோன்சன் (கோப்பாய்த்தோட்டம்), அன்ரனி அனிஸ்ரன் (நாவற்குழி), கந்தையா புஸ்பராசா (குச்சன்தோப்பு, நாவற்குழி), சின்னத்தம்பி திருவருட்செல்வம் (கோயிலாக்கண்டி,கைதடி) மற்றும் அன்ரனி திலகராட்ணம் (கைதடி நாவற்குழி) ஆகியவர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் மீதான வழக்கு விசாரணைகள் நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் நடைபெற்றன.

இவ்வழக்கில் அரச தரப்பின் சார்பாக இராணுவ சட்டத்தரணி கப்டன் குறுப்பும், மனுதாரர்கள் சார்பாக மனித உரிமைகளுக்கும், அபிவிருத்திக்குமான அமைப்பின் சட்டத்தரணி எம்.றெமீடியாஸும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

கந்தையா புஸ்பராசா, சின்னத்தம்பி திருவருட்செல்வம், அன்ரனி திலகராட்ணம் ஆகியோருடைய வழக்குகளில் எதிர் மனுதாரர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் கைதடிப் பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரியாக இருந்த கப்டன் டிமிந்த, பலாலி படைத்தளத்தின் கட்டளை அதிகாரி மற்றும் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன் ஆகியோர் தமது ஆட்சேபனைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் மன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட யாழ்.மேல் நீதிமன்ற நீதிவான் வழக்கின் விசாரணைகளை ஜனவரி 19ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இதேவேளை-

மைக்கல் பேர்னாட் ஜோன்சன், அன்ரனி அனிஸ்ரன் ஆகியோருடைய வழக்குகளில் சில திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அத்திருத்தங்களை மேற்கொண்டு எதிர்வரும் 5ஆம் திகதி அவற்றை மீண்டும் மன்றில் சமர்ப்பிக்குமாறு யாழ்.மேல் நீதிமன்ற நீதிவான் கே.பி.வரதராஜா உத்தரவிட்டார். (ஜ-5)

# ரெஜி ரணதுங்கவின் ஆதரவாளர் கொலை குறித்து பொலிஸார் தீவிர விசாரணை

## உடுகம்பொலவில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்

கொழும்பு,நவ.21

கம்பஹா மாவட்ட பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் ரெஜி ரணதுங்கவின் முக்கிய ஆதரவாளர் ஒருவரின் கொலை தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

ரணதுங்கவின் ஆதரவாளர் எனக் கூறப்படும் காமினி சுபசிங்க (வயது 40) என்பவர் நேற்றுமுன்தினம் காலை உடுகம்பொலவில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தில் வேறு மூவர் காயமடைந்தனர். அவர்கள் கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நவீன மோட்டார் வாகனமொன்றில் வந்த நால்வரில் ஒருவர் ரி-56 தன்னியக்க துப்பாக்கியால் சுட அந்த வாகனம் பறந்துவிட்டது என்று பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

சம்பவ இடத்திலேயே காமினி சுபசிங்க இறந்துள்ளார்.

உடுகம்பொல தேசியப் பாடசாலையில் மாணவர் கோஷ்டிகள் இரண்டுக்கிடையே முதல்நாள் நடந்த மோதல் தொடர்பாக ஆராய காமினியும் வேறு சிலரும் நேற்றுமுன்தினம் காலை அந்த இடத்துக்கு வந்திருந்தனர் எனக் கூறப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட போது சுமார் 50 பேர் வரை அந்த இடத்தில் கூடிநின்றனர் எனவும் தெரிகிறது. (எ-3)

### தாய்-சேய் நல பயிற்சி நெறி

குருநகர்,நவ.21

யாழ்மாவட்ட சுகாதார வைத்திய நிலையங்களில் சேவைபுரியும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான தாய் - சேய் நலப்பயிற்சிநெறி இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை யாழ் பிரதி மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்திலும், யாழ் தாதிமார் பயிற்சிப் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.த.சிவபாதம் அறிவித்துள்ளார்.

யுனிசெப் ஆதரவுடன் நடைபெறவுள்ள இப்பயிற்சிநெறி இந்நாள்களில் தினமும் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 4மணிவரை நடைபெறும். (எ-51)

# ஜனாதிபதி – பிரதமர் மோதலை விடுத்து புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்

## ஜப்பான் விசேட பிரதிநிதி அகாஷி வலியுறுத்துகிறார்

கொழும்பு,நவ.21

ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கிடையிலான கருத்து முரண்பாடுகளை விடுத்து புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று ஜப்பானிய அரசு வலியுறுத்திக் கூறியுள்ளது. இலங்கைக்கான ஜப்பானிய அரசின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி டோக்கியோவில் வைத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஜப்பானிய வெளியுறவுத்துறைப் பேச்சாளர் யட்சுசியா தகாஷிமா தெரிவித்திருப்பதாவது:-

இலங்கையின் சமாதானப் பேச்சுக்கு அடித்தளம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமானால் ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கிடையிலான கருத்து வேறுபாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். சமாதான ஏற்பாட்டாளர் நாடான நோர்வே தனது பணியை இடைநிறுத்தியிருப்பது குறித்து ஜப்பான் தெளிவான ஒரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. எனினும், நோர்வேயின் பணிகள் தொடர வேண்டும் என்பதே ஜப்பானின் எதிர்பார்ப்பாகும். இதற்காக ஜப்பான் எந்தவொரு மாற்று அமைப்பையும் முன்வைக்கவில்லை. ஆனால், நோர்வேயின் ஏற்பாட்டாளர் நிலை தொடரும் என்று ஜப்பான் நம்புகிறது.

எவ்வாறாயினும், தற்போதைய சமாதானப் பேச்சு நிலைகுறித்து ஜப்பான் அரசு தொடர்ந்து அவதானத்துடன் இருக்கும். இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஜப்பான் அரசு தொடர்ந்து ஆதரவு வழங்கும்.

- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட ஐந்துநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ளார். அங்கு இலங்கைக்கான ஜப்பானின் விசேடப் பிரதிநிதி யசூஷி அகாஷி உட்பட பல முக்கியஸ்தர்களை அவர் சந்தித்து உரையாடவுள்ளார். (எ-3)

### மீன் இணைப்பு கிடைத்தது

யாழ்ப்பாணம்,நவ.21

சிறு கைத்தொழில் இலாகாவின் கீழ் இயங்கிவரும் சங்கானை இயந்திர மட்கல நிலையத்திற்கு வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சினால் பலவருடகாலங்களுக்குப் பின் மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது. வட.மாகாணத்திலே இயந்திரங்கள் மூலம் மட்கலப் பொருள்கள் செய்யும் அரசாங்க நிறுவனமாக இருக்கும் ஒரேயொரு நிலையம் இதுவாகும். (எ-29)

# பிரான்ஸ் போர்க் கப்பல் இன்று கொழும்பு வருகை

பிரான்ஸ் நாட்டின் போர்க்கப்பல் ஒன்று இன்று கொழும்புத்துறைமுகத்துக்கு வரவுள்ளது. எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும்.

இலங்கைக் கடற்படை அதிகாரிகளுடன் பிரெஞ்சு கப்பலின் கப்டன் பேச்சு நடத்தவுள்ளார். இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து அவர்கள் ஆராய்வர்.

158 மீற்றர் நீளத்தையும் 22 மீற்றர் அகலத்தையும் கொண்ட இந்தக் கப்பலின் நிறை 18 ஆயிரம் தொன்களாகும். 13 அதிகாரிகள் உட்பட 177 வீரர்கள் இக்கப்பலில் பணியாற்றுகின்றனர். (எ-3)

## தோ.தொழிலாளர் இம்முறையும் புறக்கணிப்பு

# பிரதமரிடமும் நிதியமைச்சரிடமும் அமைச்சர் சந்திரசேகரன் அதிருப்தி!

## பட்ஜெட் வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிப்பாரா?

கொழும்பு,நவ.21

வரவு - செலவுத் திட்டத்தில் மலையக தோட்டத் தொழிலாளர்களின் நலன் முற்றாக கவனத்தில் எடுத்துக் கொள்ளாதது குறித்து மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தனது அதிருப்தியை பிரதமரிடமும் நிதி அமைச்சரிடமும் வெளியிட்டுள்ளார்.

நிதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் தனது உரையை ஆரம்பிப்பதற்கு முன்னர் நடைபெற்ற மந்திரிசபை கூட்டத்திலேயே அமைச்சர் சந்திரசேகரன் அதிருப்தியை தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்கள், விவசாயிகள் ஆகியோருக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. ஆயினும், தமது 100 வீத வாக்குகளையும் ஐ.தே.கவுக்கு அளிக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதுவிதமான நிவாரணமும் வழங்கப்படுவதில்லை. இது எம்மக்களை முழுமையாக அவமானப்படுத்தும் செயலாகும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

கம்பனிகளினால் நிர்வகிக்கப்படும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடக சம்பள உயர்வு வழங்க முடியாத நிலை இருப்பின், மலையகத்தில் வாழும் ஆயிரக்கணக்கான வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழங்கும் திட்டத்தையாவது வரவு - செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்த வேண்டும் என்று பிரதமரிடமும் நிதி அமைச்சரிடமும் அவர் வலியுறுத்தினார்.

மலையக மக்கள் தொடர்ந்து ஒவ்வொரு முறையும் இவ்வாறு புறக்கணிக்கப்படுவது பற்றி வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் - அரச முக்கியஸ்தர்களுடனும் பேச்சு நடத்தவுள்ளதாகவும் - அமைச்சர் தெரிவித்தார்.

மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ள இந்த பட்ஜெட்டைக் கண்டிக்கும் வகையில் அதற்கான வாக்கெடுப்பின் போது தனது நிலைமையை மீளாய்வு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் சந்திரசேகரன் நிதி அமைச்சரிடம் தெரிவித்துள்ளார் என்று முன்னணியின் ஊடகக் குறிப்பு தெரிவிக்கின்றது. (எ-3)



துருக்கியில் குண்டுவெடிப்பு இடம்பெற்ற வங்கிக் கட்டடம்.

# துருக்கியில் மீண்டும் குண்டு வெடிப்பு!

இஸ்தான்புல்,நவ.21

துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் நேற்று மீண்டும் சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்தன. இதில் 38 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கடந்தவாரம் இஸ்தான்புல்லில் நடந்த தற்கொலைத் தாக்குதல்களில் 23பேர் கொல்லப்பட்ட அதிர்ச்சி நீங்குவதற்கு முன்னரே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்தானபுல்லில் உள்ள எச்.எஸ்.பி.சி. வங்கியின் தலைமையகத்தையும், பிரிட்டிஷ் அலுவலகம் ஒன்றையும் உள்ளடக்கிய கட்டடத் தொகுதியிலேயே குண்டுகள் வெடித்தன.

குண்டு வெடித்ததும் அவ்விடத்திற்கு விரைந்த படையினர் உடனடியாக அக்கட்டடத்திற்கு 'சீல்' வைத்தனர். அங்கு எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

காயமடைந்தவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

குண்டு வெடிப்பை அடுத்து அங்கு ஏற்பட்டுள்ள பதற்ற நிலையையும் காயமடைந்தோர் படும் அல்லலையும் அங்குள்ள என்.ரி.வி. தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்பியது.



பிரிட்டனில் அமெரிக்க அதிபருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தக் காத்திருப்போர்.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்! மூவர் பலி; ஆறுபேர் படுகாயம்!!

பக்தாத்,நவ.21

ஈராக்கின் வட பகுதியில் குர்திஷ் இனத்தவர் வசிக்கும் பிரதேசத்தில் நேற்று நடந்த தற்கொலைக் குண்டு தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர்; ஆறு பேர் காயமடைந்தனர்.

தற்கொலைக் குண்டுத்தாக்குதல நடத்தப்பட்டதை அடுத்து அப்பகுதியில் இருந்து இரண்டு கார்கள் வேகமாக கிளம்பிச் சென்றன என்று மஜித் கரீம் என்ற பொலீஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அம்புலன்ஸ் சாரதி தெரிவித்த தகவலின்படி கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கின் வடபகுதியிலுள்ள கிருக் என்ற நகரிலேயே இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அங்குள்ள அமெரிக்கப் படையினரைக் குறிவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்ட போதும், சிவிலியன்களே இதில் பாதிக்கப்பட்டனர்.

இதற்கிடையே -

பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் தளபதிகளில் ஒருவரான இஸாத் இப்றாஹிமின் வீட்டின் மீது அமெரிக்கக் கூட்டுப்படையினர் நேற்று முன்தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதல் நடந்தபோது அந்த வீட்டினுள் எவரும் இருக்கவில்லை. இந்தத் தாக்குதலில் அந்த வீடு தரை மட்டமாகியது. 350 கிலோ எடையுள்ள மூன்று ஏவுகணைகள் தலைநகர் பக்தாத்திலுள்ள அந்த வீட்டின்மீது ஏவப்பட்டன.

# புஷ்–பிளேயர் சந்திப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

லண்டன்,நவ.21

பிரிட்டனுக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி புஷ் நேற்று அந்நாட்டு பிரதமர் ரொனி பிளேயரை சந்தித்தார்.

இவர்களது சந்திப்பை எதிர்த்து ஆயிரக்கணக்கானோர் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அவர்களில் 31பேர் பொலஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இரு தலைவர்களும் பக்கிங்ஹாம அரண்மனையில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இவர்களது சந்திப்பை முன்னிட்டு அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. பத்திரிகையாளர்கள் மட்டுமே பக்கிங்ஹாம் அரண்மனைக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

ஈராக் விவகாரம் குறித்து இரு தலைவர்களும் விரிவாக ஆராய்ந்தனர். அத்துடன், அமெரிக்காவின் குவான்டனமோ குடாவிலுள்ள இராணுவத் தளத்தில் அடைக்கப்பட்டுள்ள பிரிட்டிஷ் கைதிகள் தொடர்பாகவும் இவர்கள் ஆராய்ந்தனர்.

அதேநேரம், இவர்களது சந்திப்பை எதிர்த்து ஆயிரக்கணக்கானோர் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்கக் கொள்கைகளை எதிர்த்துக் கோஷமிட்டனர். ஜனாதிபதி புஷ்ஷின் பிரிட்டிஷ் விஜயத்தை அவர்கள் கடுமையாகக் கண்டித்தனர். ஜனாதிபதி புஷ்ஷை தீவிரவாதியாக சித்திரிக்கும் பதாகைகளை கையில் ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களை பக்கிங்ஹாம் அரண்மனையை நெருங்கவிடாமல் பொலீஸாரும், படையினரும் வீதித்தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

'அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும். அதே நேரம் சட்டத்துக்கு உட்பட்டு அமைதியான வழியில் ஆர்ப்பாட்டம் நடைபெற பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது'- என்று லண்டன் நகர பொலீஸ் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

# சிறுவர் துஷ்பிரயோக முறையீட்டில் ஜக்ஸனை சிறையில் தள்ள உத்தரவு!

## கடவுச் சீட்டை உடன் ஒப்படைக்கக் கோரிக்கை

லொஸ்ஏஞ்சல்ஸ்,நவ.21

பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜக்ஸனை (வயது-45) கைது செய்து சிறையில் அடைக்க கலிபோர்னிய நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோக முறையீடு ஒன்றை அடுத்தே அவரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவரது கடவுச்சிட்டை உடன் ஒப்படைக்குமாறும் பொலீஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். அமெரிக்காவில் இருந்து வேறுநாட்டுக்குச் செல்ல விடாமல் தடுப்பதற்காகவே கடவுச் சீட்டை ஒப்படைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

இருந்தபோதும், ஜக்ஸன் சரணடைவது குறித்து அவருடைய சட்டத்தரணியுடன் அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகின்றனர்.

'ஜக்ஸன் தன்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டார்' - என்று 12 வயதுச் சிறுவன் நீதிமன்றில் முறையிட்டிருக்கிறான். இந்த முறையீட்டை அடுத்தே ஜக்ஸனை கைது செய்வதற்கான முயற்சிகள் நடக்கின்றன.



நேற்றுமுன்தினம், கலிபோர்னியாவில் உள்ள ஜக்ஸனுக்கு சொந்தமான பண்ணை வீட்டில் பொலீஸ் அதிகாரிகள் அதிரடிசோதனை நடத்தினர். அப்போது ஜக்ஸன் அங்கு இல்லை.

அவர் பொப் இசை வீடியோ படப்பிடிப்பிற்காக லாஸ்வேகாஸ் நகரில் தற்போது தங்கியிருக்கிறார். அவர் மீண்டும் கலிபோர்னியாவை வந்தடையும் போது விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கலிபோர்னியாவில் உள்ள பிரமாண்டமான பங்களாவில் சிறுவர்களின் பொழுதுபோக்கு அம்சங்கள் ஏராளம் உள்ளன. இவற்றில் மயங்கி அங்கு செல்லும் சிறுவர்களை ஜக்ஸன் தகாத உறவுக்குப் பயன்படுத்தி வருகிறார் என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலக அரங்கில்

## ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்!

மைக்கல் ஜக்ஸனைக் கைதுசெய்து சிறையில் அடைக்க விடுத்த உத்தரவையடுத்து. அவரின் ஆதரவாளர்கள நூற்றுக்கணக்கானோர் லொஸ் ஏஞ்சலில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

"ஜக்ஸன் எங்கள் நண்பன்", "நாங்கள் ஜக்ஸனை அன்பு செய்கிறோம்" என்று எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

ஜக்ஸனைக் கைதுசெய்ய உத்தரவிட்டதற்கும் அவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

ஜக்ஸன் வந்திறங்குவார் என எதிர்பார்க்கும் சன்டா பார்பரா விமான நிலையத்தில் அவரின் ஆதரவாளர்கள் திரண்டுள்ளனர்.

அங்கு செய்தியாளர்களும், புகைப்படப்பிடிப்பாளர்களும் திரண்டுள்ளனர். இதனால், விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது

பொலீஸார் அங்கு வழமையான பணிகளில் ஈடுபட்டுள்ளனர். ஜக்ஸனை கைதுசெய்வற்காக விமான நிலையத்தில் இதுவரை எதுவித முன்னேற்பாடும் செய்யப்படவில்லை என்று கலிபோர்னிய நிர்வாகம் கூறியுள்ளது.

# ஈராக்கில் பொருளாதாரத்தை நிமிர்த்த ஐரோப்பிய யூனியன் உதவவேண்டும்

## அமெ. ஜனாதிபதி வேண்டுகிறார்

ஐரோப்பிய யூனியன் ஈராக் விவகாரத்தில் முழு ஈடுபாட்டுடன் செயற்பட வேண்டுமென்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் வலியுறுத்தியுள்ளார்.

லண்டன் சென்றிருக்கும் ஜனாதிபதி புஷ் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் சந்திப்பொன்றை நிகழ்த்தினார். இந்தச் சந்திப்பிலேயே அவர் இதனை வலியுறுத்தினார்.

ஈராக் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கும், அந்நாட்டைப் புனரமைப்பதற்கும் ஐரோப்பிய யூனியன் முன்வர வேண்டும்.

ஈராக்கின் பொருளாதாரம் பாதாளத்தை நோக்கிச் செல்வதை அனுமதிக்க முடியாது. எனவே, கடந்தகால கசப்புணர்வுகளை மறந்து சர்வதேச நிதி நிறுவனங்களும், சேவை நிறுவனங்களும், ஈராக்கில் பணிபுரிய முன்வரவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையே -

ஈராக்கில் அடுத்த ஆண்டு ஜூனில அமைக்கப்படவுள்ள தற்காலிக அரசிடம் அந்நாட்டு அதிகாரத்தை ஒப்படைக்க வகை செய்யும் பிரேரணை ஒன்றை ஐ.நாவில் தாக்கல் செய்ய அமெரிக்காவும், பிரிட்டனும் திட்டமிட்டுள்ளன.

இந்தப்பிரேரணைக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஏனைய உறுப்பு நாடுகளிடம் எதிர்ப்பு இருக்காது என்று இருநாடுகளும் கருதுகின்றன.

ஈராக் இடைக்கால ஆட்சிக்குழு ஈராக்கிற்கான அரசமைப்புச் சட்ட வரைவை அமெரிக்காவிடம் கையளித்ததும் இந்தப்பிரேரணை ஐ.நா.சபையில் தாக்கல் செய்யப்படும். (ஒ)

# இந்திய மாநிலத்தில் கலவரம் 27பேர் பலி! ஊரடங்கு அமுல்!!

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் முதல் நடைபெறும் கலவரத்தில் இதுவரை 27பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் பீகார் மாநிலத்தில் அசாம் மாநிலத்திலிருந்து பயணித்த ரயில் பயணிகள் மீது தாக்குதல் நடந்தது. இதற்கு பழிவாங்கும் நோக்குடன், அசாம் மாநிலத்தில் உள்ள பீகார் மாநில வாசிகள் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தினர்.



இந்தத் தாக்குதல் தற்போது கலவரமாக வெடித்துள்ளது. அங்கு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட படையினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அசாம் மாநிலத்தில் பீஹார் வாசிகள் இருக்கக் கூடாது என்று கூறும் ஒரு பிரிவினர், அங்குள்ள பீஹார் வாசிகளை வீடுகளுக்குள் புகுந்து படுகொலை செய்துவருகின்றனர். பதிலுக்கு பீஹார் வாசிகளும் தாக்குதல் நடத்திவருகின்றனர்.

20இற்கும் மேற்பட்ட வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. அங்குள்ள கடைகள் சூறையாடப்பட்டுள்ளன. கலவரத்தில் ஈடுபடும் கும்பல்கள் துப்பாக்கிகள், கத்திகள், பொல்லுகள் சகிதம் தாக்குதல் நடத்திவருகின்றன.

# உகண்டாவில் பெரும் கலவரம்!

கம்பலா,நவ.21

உகண்டாவில் அரசுக்கு எதிராகக் கலகம் செய்துவரும் இடதுசாரி கிளர்ச்சியாளர்கள் 53 கிராமவாசிகளை வெட்டிக்கொன்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த இச்சம்பவத்தால் அங்கு பதற்றம் நிலவுகிறது. சம்பவம் நடைபெற்ற லிரா மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான படையினர் பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டுள்ளனர்.

1986ஆம் ஆண்டு மேற்படி இடதுசாரிக் கிளர்ச்சிக் குழு அரசுக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்தது. அன்று முதல் இன்றுவரை ஆயிரக்கணக்கான சிவிலியன்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் மேற்படி கிளர்ச்சிக்குழுவுடன் அரசு நடத்திய பேச்சு முறிவடைந்தது.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை அரச கட்டுப்பாட்டு மாவட்டமான லிராவுக்குள் இரவு நேரத்தில் புகுந்த கிளர்ச்சியாளர்கள் இந்தக் கொடூரத்தை அரங்கேற்றினர்.

குறிப்பாக பெண்களும், சிறுவர்களுமே வெட்டிக்கொல்லப்பட்டனர். பலர் பலத்த வெட்டுக்காயங்களுடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## இலங்கை அரசு
## வடக்கு - கிழக்கு மாகாணம்,
## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
**கடன் இல: 2880-சீ.இ. (C.E.)**

# தேசிய போட்டிக் கூறுவிலை கோரல் நிர்மாண வேலைகள்
# மீள் கேள்வி அறிவித்தல்
## ஐ.எவ்.பி. (I.F.B.)

ஐ.எவ்.பி. இல.:முல்/நீர்ப்/01 திகதி: 19-11-2003

01) வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆதுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒருபகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D.) கடன் வசதி, ஐ.டி.ஏ. (I.D.A.) நம்பிக்கையின் கீழான வசதி.

02) அரசாங்க அதிபர், முல்லைத்தீவு, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

03) கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது முல்லைத்தீவில் மாற்றத்தக்கதான அரசாங்க அதிபர், முல்லைத்தீவு என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (DRAFT) சமர்ப்பிப்பதன் பேரில் "பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி" அவர்களிடமிருந்து 23.12.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இருபிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04) ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களைப் "பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில்" இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம எந்திரி,
மாகாண கட்டடங்கள் திணைக்களம்,
கிளிநொச்சி.

05) சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் கேள்வி திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்க அதிபர், முல்லைத்தீவு என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப்பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 24.12.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும். அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

தலைவர்,
கேள்விச்சபை,
மாவட்டச் செயலகம்,
முல்லைத்தீவு.

06) வேறு விவரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்வி குறியீட்டு இல. | வேலை விவரம் | கேள்விப் பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்றவேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| முல்/நீர்ப்/சுவே/1 | மத்திய மருந்தகம், மீள் நிர்மாணம், அலம்பில் | 122,500/- | 1,000/- | 06 மாதங்கள் |

07) கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 04 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இந்த வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்துக்குத் தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

**அரசாங்க அதிபர்,**
மாவட்டச் செயலகம்,
முல்லைத்தீவு.

(C31400)(34-15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தென்மட்டுவில் கதிரொளி சனசமூக நிலைய உறுப்பினரும் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளருமாகிய

**திரு. சோமசுந்தரம் சோமஸ்கந்தராஜா**

அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு அவரை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தென்மட்டுவில்,
சாவகச்சேரி.

- கதிரொளி சனசமூக நிலையத்தினர்,
தேனொளி மாதர் சங்கத்தினர்,
கிராம அபிவிருத்திச் சங்கத்தினர்.

(24894)(31)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஓய்வுபெற்ற தபாலதிபரும், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம், எமது பிரதேசத்தில் கிளைபரப்ப வித்திட்டவரும், அதன் தற்போதைய தலைவருமாகிய



**திரு. வீ.எஸ்.தியாகராசா**

அவர்கள் 12.11.2003 இல் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். ஊருக்காக ஓய்வின்றி உழைக்கும் இவரது சேவை மேன்மேலும் வளர வாழ்த்தி நிற்கும்...

மருமக்கள்:
த.ஜமேலா, த.துஷா,
த.தர்சி, த.பிரபா.

மருதங்கேணி.

(24884)(34)

## கண்ணீர் அஞ்சலி

எமது உளவளத் துணையாளர்
திருமதி தவமணி சத்தியதாசன் அவர்களின் அன்புத் தாயார்
**முத்தையாபிள்ளை மகேஸ்வரி**
அவர்களின் பேரிழப்பால் பெருந்துயருறுகின்றோம்.

க.வி.கந்தவேள் இணைப்பாளர்
திரு.திருமதி உடித்த குணரத்ன
Sri Lanka Interactive Media Group
T.P: 222 5441

18, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(24895)(35-15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
28
~
08
~
1944



இறப்பு
01
~
12
~
2002

**அமரர் தம்பிப்பிள்ளை நவரத்தினம்**

திதி:21.11.2003

ஆறுதல் அளிக்க ஆயிரம்
உறவுகள் இருந்த போதும்
அன்புடன் அரவணைக்க
அன்புள்ளங்கள் இருந்தபோதும்
அப்பா என்றழைக்க இங்கு
நீங்கள் இல்லையே அப்பா!
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கூடத்து மனோன்மணி
அம்பாள் சதுக்கம்,
சங்கானை.

நினைவகலாத் துயருடன்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்மார்.

(24906)(35-15)

## முதலாம் ஆண்டு சிரார்த்ததினம்

தோற்றம்
27
-
09
-
1924



மறைவு
01
-
12
-
2002

**அமரர் மூத்ததம்பி அருட்பிரகாசம்**

ஆண்டு ஒன்று சென்றாலும் அவரது நினைவுகள்
என்றென்றும் எமது மனதை விட்டகலா.

01-12-2002 இல் அமரத்துவமடைந்த மூத்ததம்பி அருட்பிரகாசம் அவர்களது முதலாம் ஆண்டு சிரார்த்ததினம் இன்று (21-11-2003) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகிறது. அதேவேளை, சுவிற்சர்லாந்திலும் இத்தினம் அவரது ஏகபுத்திரன் கிருஸ்ணராஜாவினால் (மோகன்) அனுட்டிக்கப்படுகிறது.

இன்று அவரது நினைவு தினத்தில் கலந்துகொள்வதுடன், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

"ராசகிரி"
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

மகன்: கிருஸ்னா, மருமகள்: சாந்தி
பேரப்பிள்ளைகள் சார்பில்
திரு.ச.தங்கராஜா (மைத்துனர்)

(24909)(23-15)

# உதயன்

## சபாநாயகரின் தீர்ப்பால் எழுந்துள்ள சர்ச்சை

தமது இஷ்டப்படி நாடாளுமன்றத்தை ஒத்தி வைத்து ஜனாதிபதி விடுத்த உத்தரவு தொடர்பாக நாடாளுமன்ற சபாநாயகர் நேற்றுமுன்தினம் விடுத்த தீர்ப்பு - கட்டளை - பெரும் அரசியல் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கின்றது.

சபாநாயகருக்குரிய நடுநிலைமை, பக்கம் சாராமை போன்ற பண்புகளைப் பேண சபாநாயகர் தவறிவிட்டார் என்று பிரதான எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றம் சுமத்தியிருக்கின்றது.

சபாநாயகர் என்பதை விட்டு ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் போன்று அவர் செயற்பட்டிருக்கின்றார் என்று குற்றம் சுமத்தியுள்ள பொ.ஐ.முன்னணி, இதற்காக ஜே.வி.பியுடன் சேர்ந்து சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவும் தயாராகி வருகின்றது.

பக்கச் சார்பான மேற்படி தீர்ப்பை வழங்கியதன் மூலம் சபாநாயகர் தமது பதவிக்குரிய கௌரவத்தையும் நடுநிலைமைத் தன்மையையும் பேணத் தவறிவிட்டதால் இனிமேல் அவரை நாடாளுமன்றத்தில் 'கௌரவ சபாநாயகர் அவர்களே! என்று அழைப்பதை விடுத்து 'திரு.ஜோசப் மைக்கல் பெரேரா' என்றே விளிப்பது எனவும் -

சபாநாயகர் தனது ஆசனத்துக்கு வந்து அமரும் போது அவரை கௌரவித்து மரியாதை செய்யும் வகையில் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஆசனங்களில் இருந்து எழுந்துநிற்கும் முறையை இனிக் கைக்கொள்வதில்லை எனவும் -

பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் ஒன்றுகூடித் தீர்மானித்திருக்கின்றனர் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

நாடாளுமன்றத்தின் 130 எம்.பிக்கள் கையொப்பமிட்டு வழங்கிய கடிதம் - கோரிக்கை - ஒன்று தொடர்பாகவே சபாநாயகர் தனது கட்டளையை வழங்கியிருக்கின்றார். அதுவும் நாடாளுமன்றச் சிறப்புரிமை தொடர்பான விவகாரத்தில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

இத்தீர்ப்புக்கு எதிராக நாடாளுமன்ற விவாதம் நடத்துவதோ அல்லது தீர்ப்பை வழங்கிய சபாநாயகருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதோ தப்பானவை அல்ல. அவை நாடாளுமன்றப் பாரம்பரியங்களாகவே கணிக்கப்படும்.

ஆனால், சபாநாயகரை நாடாளும்ன்ற அமர்வுகளின் போது பெயர் கூறி அழைக்க முற்படுவதும், அவர் சபைக்குள் பிரவேசித்து தனது ஆசனத்தில் அமரும்வரை எம்.பிக்கள் தங்களது ஆசனங்களில் இருந்து எழுந்து நின்று மரியாதை செலுத்த மறுப்பதும் சிறுபிள்ளைத்தனமான செயற்பாடுகள். நாடாளுமன்றப் பாரம்பரியங்களுக்கு ஒத்துவராத - ஒவ்வாத - செயல்கள் அவை. மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரைக் கொண்ட பொ.ஐ.மு. போன்ற எதிர்க்கட்சிகள் இதனை மறப்பது அக்கட்சிகளை கேலிக்கும் - பரிகாசத்துக்கும் - உள்ளாக்கும்.

'நாடாளுமன்றத்தைக் கூட்டுவது, ஒத்திவைப்பது, கலைப்பது ஆகியவை தொடர்பாக ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்கள் அரசமைப்பில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. அந்த அரசமைப்பு விதிகளுக்கு புதிய வியாக்கியானம் - விளக்கம் - கொடுப்பது சபாநாயகரின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட விடயம் அல்ல. அது உயர் நீதிமன்றத்துக்கென விசேடமாக - தனித்து - வழங்கப்பட்ட உரிமை ஆகும். எனவே, இவ்விடயத்தில் அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு புதிய விளக்கம் கொடுக்கும் வகையில் சபாநாயகர் தீர்ப்பு வழங்கியது முற்றிலும் தவறானது.' - என்பது எதிர்க்கட்சிகளின் வாதம்.

ஆனால், சபாநாயகர் தமது கட்டளைக்கு ஆதாரவாகத் தெரிவித்த அரசமைப்பின் 4(இ) பிரிவையும் நோக்குவது அவசியமாகின்றது.

"பொதுவாக மக்களின் நீதித்துறை அதிகாரம் நீதிமன்றங்கள் ஊடாக சட்டங்களின் மூலம் நாடாளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படும். எனினும், நாடாளுமன்றத்தினதும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், சட்டப்பாதுகாப்பு விலக்குரிமை அதிகாரங்கள் ஆகியவை தொடர்புபட்ட விடயங்களில் மக்களின் நீதித்துறை அதிகாரம் நேரடியாக நாடாளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படும்" - என்று அந்த 4(இ) பிரிவு கூறுகின்றது.

எனவே, நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்ற பிரதமரினதோ அல்லது அமைச்சரவையினதோ கலந்தாலோசனையின்றி - நியாயமான, போதிய காரணங்களின்றி - தம்மிஷ்டப்ப டி நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைத்ததை, நாடாளுமன்ற சிறப்புரிமை மீற லாகக் கருதி, அது தொடர்பாக நீதி நடவடிக்கை எடுக்க நாடாளுமன்றுக்கு அரசமைப்பு வழங்கிய அதி காரப்படி சபாநாயகர் செயற்பட்டது எவ்வாறு தவறாக முடியும்" என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

# சந்திரிகாவை சந்திக்க ஆனந்தசங்கரி மறுத்த செய்தியில் உண்மையில்லை!

## இப்படிக் கூறுகிறது ஜனாதிபதி செயலகம்

கொழும்பு,நவ.21

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்திக்க மறுத்தார் என்று ஊடகங்களில் வெளியான செய்திகளில் உண்மையில்லை. ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட செய்தி அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்தி குறித்த விளக்கத்துடன் ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த மறுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டதாவது:-

ஜனாதிபதியைச் சந்திக்கத் தனக்கு நேரம் ஒதுக்கித்தருமாறு ஆனந்தசங்கரி வேண்டுகோள் விடுத்திருந்தார். இதனை ஏற்று இம்மாதம் 18 ஆம் திகதி மாலை 4 மணிக்கு தன்னைச் சந்திக்க ஆனந்தசங்கரிக்கு ஜனாதிபதி நேரம் ஒதுக்கியிருந்தார். இந்நிலையில், குறிப்பிட்ட சமயத்திற்கு முன்னர் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளரை ஆனந்தசங்கரி தொடர்புகொண்டார்.

சில விடயங்கள் குறித்துக் கட்சியின் ஏனைய உறுப்பினர்களுடன் தான் கலந்தாலோசிக்க வேண்டியிருப்பதாகவும் -

அதன் பின்னரே ஜனாதிபதியுடன் பேசமுடியும் எனவும் - பிரத்தியேக செயலரிடம் ஆனந்தசங்கரி அப்போது கூறினார்.

அத்துடன், ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசத் தான் ஆர்வதுடன் இருக்கிறார் என்றும் - ஆகவே, ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச வேறொரு தினத்தை ஒதுக்கித்தர வேண்டுமெனவும் - ஆனந்தசங்கரி வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்நிலையில், ஜனாதிபதியுடனான சந்திப்பை தான் நிராகரித்தார் என ஆனந்தசங்கரி தெரிவித்தார் என்று ஊடகங்களில் வெளியான செய்தி தவறானதாகும். இவ்வாறு ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு நேரில் சந்திக்கும்படி அவசரக்கடிதம் மூலம் தனக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார் எனவும் -

ஆனால், தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இத்தகைய சந்திப்பு மக்கள் மத்தியில் தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தும் என்பதால் அச்சந்திப்பை தான் தவிர்த்துவிட்டார் எனவும் - ஆனந்தசங்கரி கூறினார் என செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

## சக்தி தொலைக்காட்சி சேவை குடாநாட்டுக்கு விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.21

சக்தி ஒலி, ஒளி ஊடகங்களின் ஐந்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி சக்தி தொலைக்காட்சி சேவை நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதன் ஓர் அம்சமாக சக்தி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை குடாநாடு முழுவதும் மக்கள் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக சேவை விஸ்தரிக்கப்பட்டிருப்பதாக சக்தி தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்திருக்கின்றது.

யூஎச்.எவ். 25 (UHF25) அலைவரிசையில் சக்தி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை யாழ்ப்பாணத்தில் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.(ஐ)

## முகாம்களுக்குள் உள்ள வடிகால்களை சுத்திகரிக்க அனுமதிக்குமாறு கோரிக்கை

### மாநகராட்சி அதிகாரி விடுத்தார்

யாழ்ப்பாணம், நவ.21

இராணுவ முகாம் பகுதிகளுக்குள் உள்ள கழிவுநீர் வாய்க்கால்களை சுத்திகரிக்க யாழ். மாநகரசபை தொழிலாளர்களை அனுமதிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாஸ் இராணுவத்திடம் இதற்கான அனுமதியைக் கோரியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாநகரசபை எல்லைக்குட்பட்ட இடங்களில் உள்ள இராணுவ முகாம்களின் எல்லைக்களுக்குள் அமைந்திருக்கும் கழிவுநீர் வாய்க்கால்கள் பல மாதங்களாகச் சுத்திகரிக்கப்படவில்லை. படைமுகாம்களுக்குள் மாநகரசபைத் தொழிலாளர்கள் செல்ல அனுமதிக்கப்படாமையே இதற்குக் காரணமாகும். நீண்டகாலமாக இந்தக் கழிவுநீர் வாய்க்கால்கள் சுத்திகரிக்கப்படாததால் அவற்றில் அடைப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனால் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள வடிகால்களிலும் கழிவுநீர் தேங்கியுள்ளது.

இவ்வாறு நீர் தேங்குவதால் துர்நாற்றம் எழுவதுடன், தொற்று நோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

ஆகவே, படைமுகாம்களுக்குள் அமைந்துள்ள வடிகால்களை மாநகரசபைத் தொழிலாளர்கள் முகாம்களுக்குள் சென்று சுத்திகரிக்க படைத்தரப்பிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது - என்று அவர் தெரிவித்தார். (ஒ-7)

## பெண்களின் நிலையை மேம்படுத்த உலக வங்கியின் உதவியுடன் திட்டம்

நெடுந்தீவு,நவ.21

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் உள்ள பெண்களை சமூக பொருளாதார ரீதியில் வலுப்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

உலக வங்கியின் அனுசரணையுடன் ஜப்பான் சமூக விருத்தி நிதியம ஊடாகத் தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சேவா லங்கா மன்றம் என்பன இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன.

சொறுப்புத்துறை, அல்லாரை, ஊர்காவற்றுறை, சின்னமடு, பருத்தித்துறை திக்கம் பகுதிகளிலும் வவுனியாவில் குளவிசுட்டான் கிராமத்திலும் அடுத்த ஆண்டில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பெண்கள் சுயமாக சமூக, பொருளாதார குடும்ப சக வாழ்வில் பங்குபற்றுதலை வலுப்படுத்தலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கிராமிய மட்ட அமைப்புக்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், பெண்களுக்குள்ள திறன்களையும் அறிவாற்றலையும் பெருக்கி அவர்களைப் பொருளாதார நிறுவன அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடவைத்தல், தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் பெணகள் மூலமாக பொருளாதார நடவடிக்கைகளுக்கு முதலீட்டை அதிகரித்தல் என்பன இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாக இடம்பெற உள்ளன." (ஒ-111)

**நாளை**

கார்த்திகை 06
சனிக்கிழமை
(22.11.2003)
திதி : திரயோதசி
முற்பகல் 9.47 வரை
நட்சத்திரம்: சுவாதி
பின்னிரவு 12.31 வரை
சுபநேரம்: 3.10-4.40
ராகுகாலம்: 9.10-10.40
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

கொதிக்கும் நெஞ்சை குளிர்மொழி அணைக்கும்.

## அதிகாலை வீட்டுக்குள் நுழைந்த சிப்பாய் இளைஞரிடம் சிக்கினார்!

### சுன்னாகத்தில் சம்பவம்

வலி.வடக்கு, நவ.21

அதிகாலை நேரம் வீடொன்றுக்குள் நுழைந்த சிப்பாய் அங்கிருந்தோரால் மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

சுன்னாகம் பஸ் நிலையத்திற்குப் பின்புறம் உள்ள வீடொன்றினுள் நேற்றுமுன்தினம் அதிகாலை சுமார் ஒரு மணியளவில் நுழைந்த சிப்பாயே வீட்டில் இருந்த இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். இந்தச் சிப்பாய் பிடிபட்டபோது சீருடையின்றி காற்சட்டை மட்டும் அணிந்து காணப்பட்டார் எனக் கூறப்படுகிறது. பின்னர் அவர் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அவரை நேற்றுமுன்தினம் சுன்னாகம் பொலீஸார் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சிப்பாயை இராணுவப் பொலீஸார் வசம் ஒப்படைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டதாக சுன்னாகம் பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் உள்ள வீடுகளுக்குள் நள்ளிரவு வேளைகளில் அடையாளம் தெரியாதோர் நுழைந்த சம்பவங்கள் பல தடவைகள் இடம்பெற்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஒ-86)

## நாளை மின்வெட்டு

யாழ்ப்பாணம்,நவ.21

சில பகுதிகளில் நாளை சனிக்கிழமை பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளவுள்ளதால் காலை 9.30 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்தடை ஏற்படுமென மின்சார சபையின் பிரதேச பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

மூளாய், பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, இளவாலை, சங்கானை, சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி மற்றும் ஏழாலை ஆகிய பகுதிகளிலேயே மின்சாரம் தடைப்பட்டிருக்கும். (5)

## கண்ணிவெடி அகற்றிய பணியாளர் அது வெடித்ததினால் படுகாயம்!

யாழ்ப்பாணம்,நவ.21

கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர் மிதிவெடி ஒன்று வெடித்ததனால் படுகாயமடைந்தார். நேற்றுமுன்தினம் மருதனார்மடம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது தவறுதலாக வெடித்த மிதிவெடியினால் கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த குலோத்துங்கம் கணேஸ் (வயது 29) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கைகளிலும், தாடைப்பகுதியிலும் காயமடைந்த இவர். சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த இரு மாதங்களில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டவர்களில் மிதிவெடிகளில் சிக்கி மூன்று பணியாளர்கள் இதுவரை காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6-7-10-15)

## குடாநாட்டு மருத்துவர்களுக்கு தேயிலை குறித்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.21

இலங்கைத் தேயிலைச் சபை யாழ். குடாநாட்டில் மருத்துவத்துறைசார்ந்தோருக்கு 'தேயிலையும் ஆரோக்கியமும்' என்னும் தலைப்பில் கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம்திகதி காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி கேட்போர் கூடத்தில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்தரங்கை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இக்கருத்தரங்கில் 'தேயிலையின் பௌதீகத்தன்மை', 'தேயிலையின் போஷாக்குத் தன்மை' ஆகிய தலைப்புக்களில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் ஏ.எம்.ரி. அமரக்கோன் கருத்துரை வழங்குவார்.

இதனைத்தொடர்ந்து 'தேயிலையும் வாய்மூல ஆரோக்கியமும்' என்னும் கருப்பொருளில மருத்துவத்துறைக்கான முதுமாணி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் சிரானி அபயரட்ணவும், 'தேயிலையும் இருதய சம்பந்தமான நோய்களும்' என்னும் தலைப்பில் ருகுணு பல்கலைக்கழகப் பேராசிரியர் ரிஃப்ரி மொஹைதீனும், 'தேயிலையின் மருத்துவப் பெறுமானம்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைப் பேராசிரியர் பவானி ஆகியோரும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்துத் துறைசார் மருத்துவர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-8)

## பாராட்டும் வாழ்த்தும்



சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த
ஓய்வு பெற்ற அதிபர்
**சிவசாதனன்**

### திரு. சி.சிவகுரு

அவர்கள் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றதை முன்னிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவரது பணி மேன்மேலும் சிறக்க எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டிப் பணிகின்றோம்.

இன்று (21.11.2003) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் மானிப்பாய் ஸ்ரீ முருகன் அருள் நிலையத்தில் மார்க்கண்டு சுவாமிகளால் பாராட்டு கௌரவிப்பு நிகழ்வு நடைபெறும்.

(24867) (25-14-18) — **அடியார்கள்.**

## புல் துண்டங்கள் விநியோகம்

வடமராட்சி,நவ.21

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தால் நல்லின புல் துண்டங்கள் கால்நடைப் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இலவசமாக வழங்கப்பட்டுவரும் புல் துண்டங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பண்ணையாளர்கள் கால்நடை வைத்தியசாலை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர். (எ-173)

## விற்பனைநிலையம் திறந்துவைப்பு

கால்நடைகளை வளர்ப்போரின் வசதி கருதி மந்திகை ஆஸ்பத்திரி வீதியில் கால்நடை அபிவிருத்தி விற்பனை நிலையம் ஒன்றை வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் திறந்துவைத்துள்ளது.(எ-173)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

### திரு.கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்



பிரான்பற்று, பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரும் ஸ்கந்தாவின் பழைய மாணவரும், இ.போ.சவில் நேரக்கணக்காளராகக் கடமையாற்றியவரும், யாழ். இ.எ.ச.நிர்வாக உறுப்பினரும், இந்துசமய புராண நூல்களான கந்த புராணம், வாதவூர்ப் புராணங்களின் பயன், பொருள், விளக்கங்களை பிரான்பற்று பெரிய வளவு ஆலயத்திலும் ஏனைய ஆலயங்களிலும் விரிவுபடுத்தி வருபவரும் முன்னாள் கி.அ.ச.செயலாளரும் பண்டத்தரிப்பு ப.நோ.கூ.ச. இயக்குநர் சபை உறுப்பினரும் கிளை 8 இன் செயலாளரும் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் செயலாளருமான இவர், 29-10-2003 அன்று யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். திரு.கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம் அவர்களின் சேவை சிறப்புற மகிழ்ந்து மாணிக்கப்பிள்ளையாரின் துணைவேண்டி நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறோம்.


T.N.காந்தன் குடும்பத்தினர்
ஏற்றுமதித் திணைக்கள அதிகாரி.

கொழும்பு. (24883) (14-18-17)

---

ஓம் சாயிராம்

## நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவலைகள்



அமரர்

### இராசையா செல்லையா

*(இளைப்பாறிய எழுதுவினைஞர் – வருமானவரித் திணைக்களம்)*

திதி: திரயோதசி 21.11.2003 வெள்ளிக்கிழமை

தாயின் மடியில் 17.09.1927
இறைவனடியில் 02.12.2002

**எங்கள் அன்பான அப்பாவே!**
**கண் இமைக்க முன்**
**எங்களை விட்டு நீண்டதூரம்**
**சென்றுவிட்டீர்களே!**
**ஒரு வருடம் என்ன**
**எத்தனை வருடங்கள்**
**ஆனாலும்**
**எங்கள் ஈரவிழிகளில்**
**உங்கள் அன்பான உருவமே**
**வந்து போகும்!**
**உங்கள் நினைவுகள்**
**என்றென்றும்**
**எங்களைத் தொடர்ந்து வரும்!**

*என்றும் உங்களது பசுமையான நினைவுகளுடன் வாழும்:*
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 5
'பிரசாந்தி'
தேவாலய ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (24807) (14-18-17)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மண்ணில் 13 - 01 - 1947



விண்ணில் 22 - 10 - 2003

### அமரர் கந்தன் சுந்தரலிங்கம்

(ஐயம்பிள்ளை)

*மானிடராய் எம் உடன் கூட இருக்கையில்*
*வாழ்வே சொர்க்கமாகத் தோன்றியது*
*இன்று வாழ்வை நரகமாக உணர வைக்கிறதே*
*உங்கள் இழப்பு தந்த காயங்கள்!*
*கலகலக்கும் உங்கள் பேச்சும் மாசில்லாப் புன்னகையும்*
*நித்தம் பூத்த உம்முகம் இருதயத்தில் இருக்குதப்பா;*
*இடம்பெயர மறுக்குதப்பா!*
*இப்போது நாம் கேட்கும் பாடல்கள் உங்கள் நினைவை*
*எமக்கு ஊட்டுதப்பா!*
*எம் ஆவி சோருதப்பா வாழ்க்கை என்பது புதிரென்பார்*
*உங்கள் மரணம் கூடப் புதிர்தானே!*
*யாதும் ஒன்று ஆனாலும் மீண்டும் மீண்டும் உம்மைக் காணத் துடிக்கின்றோம்.*

இன்று (21.11.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


*"லிங்க பவனம்"*
*நொத்தாரிஸ் தோட்டம்,*
*கரணவாய் மேற்கு, கரவெட்டி.*
(24215) (25-14-17-18)

மனைவி,
பிள்ளைகள்.

---

## 55 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 06 - 02 - 1935



மறைவு 29 - 09 - 2003

### அமரர் தியாகராசா சதாசிவம் (மேஸ்திரியார்)

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்து
அமரர் ஆகிவிட்ட எங்கள் ஐயாவே!
பாசம் நெஞ்சில் மோத, தேடி ஓடி வந்த நேரம்
பாதிவழியில் தவிக்கவிட்டு சென்றதேனோ?
ஆயிரம் நினைவுகள் எம்மைத் தொடும்
அனைத்தும் அடுத்து மறந்து போகும்
ஐயா உங்கள் நினைவு என்றும்
எங்கள் உள்ளத்தில் நின்று வாழும்
ஆத்மாவின் ராகத்தில் ஆற்றொணா சோகத்தில்
அலைகடல் மீதிருந்து.......
ஆத்மசாந்திக்காய் வேண்டுகிறோம்.

நாளை (22.11.2003) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புது வீதி, மதவடி,
வல்வெட்டித்துறை. (23969) (14-18-17)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## மரண அறிவித்தல்

### அறுக்கான்சிப்பிள்ளை வில்வீனம்மா

(செல்லக்கண்டு - பாக்கியம்)

இளவாலை, போயிட்டிசீந்திப்பந்தலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் குருநகர்,பாங்ஷால் வீதி, 225ஆம் இலக்க இல்லத்தில் இடம்பெயர்ந்து வசித்துவந்தவருமான அறுக்கான்சிப்பிள்ளை வில்வீனம்மா 17.11.2003 திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அறுக்கான்சிப்பிள்ளையின் மனைவியும் மரியதாஸ் மனோகரன் (அண்ணாவியார்), மரியசெல்வம் அருள்றோஸ், ஞானேஸ்வரெர் (பேபிராஜா, தமிழ்க்கத்தோலிக்க ஆத்மீகப்பணியகம், ஜேர்மனி), அன்ரன் பீலிக்ஸ் (மணிவண்ணன், தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபன நிகழ்ச்சி அறிவிப்பாளர், கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மேரியோசப்பின், மரியசெல்வம், அன்ரனிற்றா, சித்திரா ஆகியோரின் அருமை மாமியாரும் மாசில்லாமணி செல்வரெட்ணம், அந்தோனிப்பிள்ளை திரவியம் (ஓய்வு பெற்ற அதிபர், கனடா) ஆகியோரின் சகோதரியும் மனோஜினி (சுவிஸ்), ஜெனா(லண்டன்), சுபாஜினி, அருட்சகோதரர் கபிலஸ் "சுனா"(திருவுளச்சபை), கஜேந்திரன் (குட்டி), அலெஸ்ரன் (சுவிஸ்), அனுலா (ஜேர்மனி), நிமல்சன் (கனடா), றொஷான், றொஷானி (ஜேர்மனி), சாம்யோணாஸ்(கனடா) ஆகியோரின் பேர்த்தியும் கிரிஷாந், நிஷாந் (சுவிஸ்), குளோறியா, கியூரி (ஜேர்மனி), ஷரோன், கெவின்(சுவிஸ்), நெவில்சன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக பாங்ஷால் வீதி, 225ஆம் இலக்க இல்லத்தில் இருந்து நாளை (22.11.2003) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, குருநகர் யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்தலைத் தொடர்ந்து, இளவாலை, போயிட்டி லூர்த்து அன்னை சேமக்காலைக்குக் கொண்டுசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

தகவல்:
மரியதாஸ் மனோகரன்
(மகன்)
(அண்ணாவியார்).

*குருநகர்.* (சி-31372)(14-18-18)


# அரச திணைக்களங்களில் நாளாந்தம் பொதுமக்கள் படும் துன்பம் நீங்குமா?

'யாழ்ப்பாணத்திலும் பஸ்வண்டிகள் ஓடுகின்றன' என்ற தலைப்பில் இருபது வருடங்களுக்கு முன்னர் தினகரன் பத்திரிகையில் கட்டுரை ஒன்று வெளிவந்தது. அப்பொழுது யாழ்ப்பாணத்தில் நலிவிய பஸ்போக்குவரத்தைப் பற்றியே இக்கட்டுரையின் கருப்பொருள் அமைந்திருந்தது. இதேபோல்தான் இன்று யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச திணைக்களங்களும் செயறபடுகின்றனவா? என எண்ணத் தோன்றுகின்றது.

இன்று தினமும் பொதுமக்கள் படும துன்பங்கள் பற்றியும் அவர்களுக்குச் சேவை செய்யவேண்டிய அரச பணியாளர்களின் மெத்தனப்போக்குப் பற்றியும் அறிகின்றோம். இப்பணியாளர்கள் பற்றித் திணைக்களத் தலைவர்களும் காலத்துக்குக்காலம் சுற்றறிக்கைகள் மூலம் கருத்துக்களை தெரிவித்துக்கொண்டே வருகின்றனர். ஆனால், அரச பணியாளர்களின் நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. கிராம அலுவலர் தொடக்கம் யாழ். செயலகம் வரைக்கும் ஏனோதானோ என்ற மனோநிலை தான் தோன்றுகிறது. இந்நிலையை அரச அதிபரின் பத்திரிகைச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. பொதுமக்களுக்குச் சேவை செய்யவேண்டிய அரச பணியாளர்கள ஏன் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது. பிரதேச மட்டத்தில் உள்ள செயலகங்களுக்குப் பிந்திச் சென்று வீட்டுக்கு முந்திச் செல்வது, பொதுமக்கள கடமையின் நிமித்தம் சென்றால, அவர்களை கவனியாது தங்களுக்குள்ளே பேசிக் கதைத்து வீண் விதண்டாவாதங்களில் ஈடுபடுவதும் பொதுமக்கள் நன்றாக அவதானித்துள்ளனர்.

இவற்றுக்குச் சான்றாகப் பல சம்பவங்களை உதாரணமாகக் காட்டலாம். இக்குறைப்பாடுகளை நிவர்த்தி செய்ய உயர் அதிகாரிகள் விரும்பினால் தங்கள் நிர்வாகத்தின் கீழ் உள்ள திணைக்களங்களுக்கு திடீர் விஜயங்களை மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்து மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம். இன்று ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்வது, வருடாந்தச் சம்பள உயர்வை நிறுத்துவது, குற்றங்களைப் புரிவோர் மீது நடவடிக்கை எடுத்தல் போன்றவை அரிதாகவே காணப்படுகின்றன. கடமை உணர்வு, அர்ப்பணிப்பு இல்லாதமை, வேலைத் தாமதங்களை உண்டாக்குவது ஆகியன இதற்கான காரணிகள் ஆகும்.

எங்களுக்குச் சுதந்திரம் கிடைத்த நாள் முதல் திணைக்களங்களின பங்களிப்பு பொதுமக்களுக்கு உகந்ததாகவும், உதவியாகவும் இருக்கவில்லை. ஓர் உதாரணத்துக்கு ஒரு பொதுமகன் தனது தேவையை நிறைவேற்றும்பொருட்டு காரியாலயம் ஒன்றுக்குச்சென்றால் சரியான தகவல் இன்றி சென்றவர் மேசைக்கு மேசை சென்று அரைகுறை தகவலுடன் திரும்ப வேண்டிய நிலைமையே இன்றும் காணலாம். ஓர் அரச ஊழியர் தனக்கு ஒதுக்கப்பட்ட கடமையைப் பற்றி அறிந்திருக்க வேண்டியது நியாயமான ஒன்றாகும். அண்மையில் நடந்த சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. காணிப் பதிவு சம்பந்தமாக முத்திரைகள் தேவையில்லை என்ற ஓர் அறிவித்தலில் சந்தேகம் கொண்ட ஒருவர் நிலைமையை அறிவதற்காக பலரிடமும், சட்டத்திரணிகளிடமும் சென்று அவ்விடயம் தொடர்பாக சரியான நிலைப்பாடு என்ன என்று தெரியாததால் சம்பந்தப்பட்டவர் பொறுப்பான அதிகாரி ஒருவரை வினவியபொழுது அவர் சொன்ன பதில் அங்கு சென்றவருக்கு திகைப்பையும் வியப்பையும் ஏற்படுத்தியது. அவர் சொன்ன கருத்து "நீங்கள் சட்டத்தரணிகள் சொல்வதனபடி நடவுங்கள்" இதுதான் இன்றைய நிலை. இதனால், பொதுமக்களுக்கு சரியான தகவலும் இலலை அத்துடன், வீண் சிரமத்துக்கு உள்ளாகப்படுகின்றனர்.




மேலும் ஒய்வூதியம் பெறுவோருடைய பற்றுச்சீட்டை அனுப்பிவிட்டு, வங்கிக்குரிய காசுக் கட்டளையை உரிய நேரத்துக்கு அனுப்பாத நிலையில் சம்பந்தப்பட்டவர்கள் பல கஷ்டங்களுக்குள்ளாகின்றனர். அத்துடன, திணைக்களங்களில் உள்ள படிவங்கள் இல்லாததாலும் பொதுமக்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. வருட முடிவிற்கு முன்னர் வாகனங்கள் உபயோகிக்க முடியாத நிலையில் அதற்குரிய படிவங்கள் பெறுவதில் வாகனச் சொந்தக் காரர்கள் கஷ்டத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இக்குறிப்பிட்ட படிவம் வாகன உரிமையாளரினால் நிரப்பப்பட்டு, சம்பந்தப்பட்ட ஆண்டில் டிசெம்பர் 31ஆம திகதிக்கு முன்னர் கொடுக்கப்பட வேண்டும் என்பது சட்ட நியதி. ஆனால், சம்பந்தப்பட்ட படிவங்கள் உரிய நேரத்தில் விநியோகிக்கப் படாததால் வாகன உரிமையாளர் ஒருவர் உரிய நேரத்தில் சமர்ப்பிக்க முடியாத நிலைக்கு தள்ளப்படுகிறார். இப்படிவங்களை உரிய நேரத்தில் பெறுவது சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் கடமை என்பதை உரியவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

அத்துடன், மேல் அதிகாரிகள் கவனக்குறைவும் இதுபோன்ற சம்பவங்களுக்கு உதவியாக அமைகின்றன. திணைக்களங்களில் நடக்கும் விசித்திரமான சம்பவங்களை தற்பொழுது ஒய்வுபெற்றிருக்கும் அரச பணியாளர் கூறியதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல வருடங்களுக்கு முன்னர் அவர் கடமையாற்றிய திணைக்களத்தில் ஒரு பொதுமகனுக்குக் கடிதம் ஒன்று அனுப்பி அத்துடன், சம்பந்தப்பட்ட படிவம் ஒன்று இணைக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப் பட்டிருந்தது.

கடிதத்தைப் பெற்றவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். அவர் இதுபற்றி 'டெய்லி நியூஸ்' பத்திரிகைக்கு ஒரு கடிதத்தை அனுப்பி கடிதம் வந்தது. ஆனால், படிவம் வரவில்லை எனத் தெரிவித்திருந்தார். இக்கடிதம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அன்று திணைக்களத் தலைவர் காலையில் பத்திரிகையைப் படிப்பதுண்டு. இக்கடிதத்தைப் பார்த்த குறிப்பிட்ட திணைக்களத் தலைவர் தனக்குக் கீழ் கடமையாற்றும் அதிகாரியை அழைத்து சம்பந்தப்பட்ட கோவையை சமர்ப்பிக்குபடி கேட்டபோது அப்படிவம் அக் கோவையில் இருந்தது. இதனைப் பார்த்த திணைக்களத் தலைவர் தானே கையொப்பமிட்டு அப்படிவத்தை அனுப்பி, நடந்த தவறுக்காக மன்னிப்பு கோரியிருந்தார்.

அத்துடன், கடமை தவறிய பணியாளருக்கு ஓர் எச்சரிக்கையைக் கடிதம் மூலம் வழங்கியிருந்தார். திணைக்களத் தலைவர் அன்று எவ்வளவு தூரம் பொறுப்புணர்ச்சியுடன் பொதுமக்களின் நலனில் அக்கறையுள்ளவர்களாக இருந்தார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இந்த நிலைக்கு எங்கள் பகுதியில் கடமையாற்றும் அரச பணியாளர்கள் தம்மையும் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் தற்போது பேசப்படும் இடைக்கால நிர்வாகத்தினை திறமையாகவும், நாட்டுப்பற்றுடனும் தம்மை அர்ப்பணித்து குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்தி சிவப்பு நாடாமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

தற்பொழுது நாட்டில் மக்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற கருத்து எல்லா இடங்களிலும் பேசப்படுகிறது. பத்திரிகைகளிலும இதுபற்றிச் செய்திகள் வெளிவருகின்றன. ஆனால், ஒரு சம்பவத்திலிருந்து நாம் திருந்துவதாகத் தெரியவில்லை. தொடர்ந்தும் இக்குறைபாடுகள் இடம் பெறுகின்றன. இதற்குக் காரணம் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் இவ்விடயங்களில் ஓர் இறுக்கமான நிலைமையைப் பேணாமையேயாகும். களவு, மோசடி, சோர்வு ஆகியன சர்வசாதாரணமாக நடைபெற்றுவருகின்றன. இவ்விடங்களில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை தாமதப்படுத்துவதாலும் சிலின கவலையீனம் காரணமாகவும் இச்சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு உதவியாக அமைகின்றன. அரச சேவையிலும் நேர்மை, உண்மை, கடமையுணர்வு, சேவை மனப்பான்மை, பொறுப்புணர்ச்சி என்பன இன்றியமையாத பண்புகள். இன்று லஞ்சம், ஊழல் எல்லா நாடுகளிலும் இடம்பெறுகின்றன. என்றாலும், இலங்கை 66ஆவது இடத்தையே பெற்றிருக்கிறது. இதையிட்டு நாம் சந்தோஷமடைய முடியாது. ஏனெனில், இவைகளினால் பாதிக்கப்படுபவர்கள். அரசுக்கு வரி செலுத்தும் அப்பாவிப் பொதுமக்களே. அத்துடன், அரச திணைக்களங்களில் அனுமதிக்கப்பெற்ற கால எல்லையைவிட சிலர் கூடுதலான வருடங்கள் சேவை செய்வதனால், பிற அரச ஊழியர்கள் இடமாற்றம் பெற்று கடமைசெய்யும் சந்தர்ப்பத்தை இழக்கிறார்கள். இதனைக் கருத்திற்கொண்டு திணைக்களத் தலைவர்கள் சம்பந்தப்பட்ட பணியாளர்களை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் அது நல்ல உதாரணமாக அமையும். தகுந்த, நியாயமான காரணங்களுக்காக இவ்விதிமுறை தளர்த்தப்படுமேயானால், அதனையிட்டு எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

மேலும் சில திணைக்களங்களில பொறுப்பான இடங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் சிலர் உள் இடமாற்றம் செய்யப்படாமல் இருப்பதை சில திணைக்களத் தலைவர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேலையை திறம்பட ஆற்றுவதற்கு உதவியாகவும் அத்துடன், முன்னவர் செய்த கடமைகளில் ஏதும் குறைபாடுகள் இருப்பின் அதனை ஆராய்வதற்கும் உதவியாக இருக்கும்.

இந்நடைமுறைகள் செய்யப்படாததன் காரணத்தினால், அரச திணைக்களங்களால் பதிவேட்டில் பதிவுசெய்யப்படாமலும், நாளாந்த செயற்பாடுகள் உடனுக்குடன் பதிவேட்டில் இடம பெற்றதன் காரணத்தால் பல குறைபாடுகளை நாங்கள் பத்திரிகை வாயிலாக அறியக் கூடியதாக இருந்தது. இவற்றினைத் தவிர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட பொறுப்பாளரின் மேற்பார்வை அத்தியாவசியமாகின்றது. இவற்றினை ஒரு திணைக்களத் தலைவர் சுற்றறிக்கை மூலமாகவோ அல்லது கருத்தரங்குகள் மூலமாகவோ மட்டும் செயற்படுத்தமுடியாது. சம்பந்தப்பட்டவர்கள் மனதில் மனமாற்றம் தேவை.

**எஸ்.கே.ரி.**

மேலும் அரச பணியாளர்கள், கிராம அலுவலர் உட்பட பொது மேடைகளில் பேசி மக்கள் தொடர்பை ஏற்படுத்துவதைக் காணக்கூடியதாக இருக்கிறது கடமை நேரங்களில் இதுபோன்ற நிகழ்வுகளுக்குச் செல்பவர்கள் அக் கடமை முடிந்ததும் மீண்டும் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தங்கள் திணைக்களங்களுக்குத் திரும்ப வேண்டும். ஏனெனில், அவர்களிடம் பல பிரச்சினைகளுடன் பல பொதுமக்கள் காத்திருப்பார்கள். கடமையின் நிமித்தம் வெளிக் கடமைகளுக்கோ அல்லது திணைக்களங்களுக்கோ, செல்லும் அரச பணியாளர்கள் பதில் ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட சக பணியாளர்களுடன் ஒழுங்கு செய்வது இன்றியமையாததாகும் ஏனெனில், பொதுவாகக் கிடைக்கும் பதில் அவர் வெளியே போய் விட்டார்கள் என்பதேயாகும்.

இறுதியாக எப்பா என்ற கணக்காளர்நாயகம் தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்ததாவது:

"அரச பணியாளர்கள் வெளி மாவட்டங்கள் ஆகிய கண்டி, காலி, மாத்தறையிலிருந்து நேரத்திற்கு வந்து விடுகிறார்கள். ஆனால், கொழும்பு நகரைச் சுற்றி இருப்பவர்கள்தான் பிந்தி வருகிறார்கள் என்பதே ஆகும். ஆனால், யாழ்ப்பாணத்தில் பல ஆண்டுகளுக்கு, முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது வரவேற்கத்தக்க ஒன்றாகும். ★

---

## பொ.ஐ.மு., ஐ.தே.மு. இணைந்து

# தேசிய அரசு அமைப்பது என்பது யதார்த்தத்துக்கு ஒவ்வாத விடயம்

### விக்கிரமபாகு கருணாரட்ண கூறுகிறார்

கொழும்பு,நவ.21

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் நேர் எதிர்கொள்கைகளை உடைய ஐ.தே.மு., பொ.ஐ.மு. கட்சிகள் இணைந்து தேசிய அரசு அமைப்பது என்பது யதார்த்தத்துக்கு ஒவ்வாத விடயம்.

- இப்படி கூறியுள்ளார் புதிய இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலர் விக்கிரமபாகு கருணாரட்ண.

கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் அக்கட்சி நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக அலகு ஐக்கிய இலங்கைக்குள் நடைமுறைப் படுத்தக்கூடிய ஒரு விடயமே. அது தனிநாட்டுக்கான வரைவல்ல. இதை இனவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள் இல்லை.

எனவே, சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கக்கோரி இடதுசாரி அமைப்புக்களை திரட்டி நாம் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம். பிரதமருக்குள்ள அதிகாரங்களைப் பறித்துக்கொண்டு அவரைச் சமாதானத்தை முன்னெடுக்கக் கோருவது வேடிக்கையானது. நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என ஜனாதிபதி நீண்டகாலமாக கூறிக் கொண்டிருந்தார். அவர் அந்தப் பொறுப்பை கையேற்றவுடன் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டும் எனக்கோரிக்கை விடப்படுகிறது. தேர்தல் ஒன்றுக்குச் சென்று அதில் ஐ.தே.க. வெற்றி பெற்றாலும் ஜனாதிபதி பதவியிலிருக்கும்வரை அவர் தனது அதிகாரத்தை பயன்படுத்திகொண்டுதான் இருப்பார். ஜே.வி.பியுடன் கூட்டுச் சேராமல் பொது ஜன ஐக்கிய முன்னணி தேர்தலுக்கு செலலுமானால் அதன் விலாசம் இல்லாமல் போய்விடும் நிலையே இன்று உள்ளது.

1978இல் இந்த அரசமைப்பு மூலம் ஜனாதிபதிக்கு இவ்வளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டபோது அவ்வேளையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்து கறுப்புக்கொடி கட்டியவர்கள் நாங்கள் மட்டுமே. அந்த அரசமைப்பின் பாதிப்பு இன்று தெரிகிறது.

- இப்படி அவர் கூறினர்.

**நீல் விஜேதிலக**

கட்சியின் மத்திய குழு உறுப்பினர் நீல் விஜேதிலக அங்கு கூறியதாவது:-

தமிழ்த் தேசிய இனத்தின் எழுச்சியை ஒடுக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஈடுபட்டுள்ளமை வெட்ட வெளிச்சமாகியுள்ளது. சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு தான் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக ஜனாதிபதி கூறிவருகிறார்.

பச்சை இனவாதம் பேசும் ஜே.வி.பியினருடன் கூட்டுவைத்துக்கொண்டிருக்கும் ஜனாதிபதியால் எப்படி சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

அவரின் தம்பி அனுரா பண்டாரநாயக்க தலைமையிலான ஒரு குழுவினர் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக வரைவை ஏற்றுக்கொண்டு பேச்சுக்கள் மேற்கொள்ளக்கூடாது எனக் கூறிவருகின்றனர். இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய கட்சியினரைத் திருப்தி செய்வதற்காக ஜனாதிபதி திட்டமிட்டு செயற்பட்டமை தெளிவாகத் தெரிகின்றது.

இந்த நாட்டில் தமிழ் பிரச்சினையைத் தீர்க்க பிரதமரும், ஜனாதிபதியும் இணைந்து செயற்படாவிட்டால், பெரும் அபாயத்தை சந்திக்க நேரிடும்.

தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது சிறுபான்மையினரை பாதிக்கும் என அமைச்சர் தொண்டமான் கூறியிருக்கிறார். அப்படியொரு நிலையேற்பட்டால், தான் புலிகளுடன் சேரப் போவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். அவரது அந்த நிலைப்பாடு சரியானது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தேசிய அரசை நாம் ஆதரிப்போம் - என்று அவர் கூறினார்.

இந்த மாநாட்டில் திருநாவுக்கரசு, ஜயந்த விக்கிரமசிங்க, நீல் விஜேதிலக, தர்மசிறி ஆகியோரும் உரையாற்றினர். (எ)

---

## உபகரணங்கள் அன்பளிப்பு

கொழும்புத்துறை,நவ.21

யாழ். பிரதேச செயலக யாழ்நகர் கிழக்கு வலய சமுர்த்தி வலய அலுவலகத்தினால் சமுர்த்தித் திட்டத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின்கீழ் வீட்டு விற்பனை நிலையம் அமைத்துப் பயன பெற தெரிவுசெய்யப்பட்ட 5 பயனாளிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தவணைக் கட்டண அடிப்படையிலான இந்த உதவியில் மேலும் இருவருக்கு நடைபாதை வியாபாரம் மேற கொள்ள 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று சமுர்த்தி முகாமையாளர் அறிவித்துள்ளார். (எ-30)

## விடுமுறைகால பயிற்சிநெறி

பருத்தித்துறை யோருட் நிறுவனத்தினால் சிறுவர்களுக்கான விடுமுறை காலப்பயிற்சிநெறி எதிர்வரும் முதலாம் திகதிமுதல் தம்பசிட்டியிலுள்ள யோருட் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஒருமாத காலம் நடைபெறும் இப் பயிற்சிநெறியில் 6 ஆம் ஆண்டு தொடக்கம் 10 ஆம் ஆண்டுவரையில் கல்வி கற்கும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். 6 ஆம், 7 ஆம், 8 ஆம ஆண்டு மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும் 9 ஆம், 10 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு மற்றொரு பிரிவாகவும் இப்பயிற்சிநெறி நடத்தப் படும். (எ-173)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள் ரூபா 50/=, அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் ரூபா 62/= என்பன 24.11.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (24876)

### திருமண சேவை

1969, கார்த்திகை 3, செவ்வாய் 8 இல் கூடிய கிரகபாவமுள்ள, சைவ போசன ஆசிரியருக்கு ஏற்ற அழகான சைவ மணமகள் வேண்டப்படுகிறார். தொடர்பு: இலகு திருமண சேவை, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (24871)

### காணி தேவை

நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய பகுதிகளை அண்டி2 பரப்புக்காணி உடன் தேவை. தொடர்பு: விள.இல:2099, மே/பா.உதயன்(24910)

### ஆற்றல் மேம்பாட்டு பயிற்சி நெறி

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் சமூக மட்ட அமைப்புகளுக்கான ஆற்றல் மேம்பாட்டு மூன்று நாள் பயிற்சி நெறி இன்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. நாளைமறுதினம் வரை நடைபெறும் இப்பயிற்சிநெறியில் இப்பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விவசாயிகள் சம்மேளனங்கள் ஆகிய சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

இதில் பங்குபற்றும் பிரதிநிதிகளுக்கு தினமொன்றுக்கு 100 ரூபா ஊக்குவிப்பு படியாக வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-135)

### ரெயிலர் தேவை

ஆண்களுக்கான ஆடைகள் தைக்கத் தெரிந்தவர்களும், பெண்களுக்கான ஆடைகள் தைக்கத் தெரிந்தவர்களும் தேவை.

தொடர்பு, இல:91, கண்டி வீதி,சுண்டிக்குளி (24905)

### தேவை

யாழ். வணிகர் கழகத்திற்கு ஆண் அலுவலக உதவியாளர் (Peon) ஒருவர் தேவை. 26.11.2003 இற்கு முன் தகுதியானவர்

யாழ்.வணிகர் கழகம்,
இல.165, மானிப்பாய் வீதி
என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (C31403)

### கம்ப்யூட்டர் உலகம்

**இலங்கையின் முழுமையான கணனி மாத சஞ்சிகையின் வெளியீடுகள்**

- ☐ 12 மாத கம்ப்யூட்டர் உலகம் ரூ.300/=
- ☐ முழு கணனி வழிகாட்டி ரூ.250/=

**தமிழ் மூலமான வழிகாட்டி நூல்கள்**

- ☐ கணனி அறிமுகம் ரூ.40/=
- ☐ இன்டர்நெட் ரூ.40/=
- ☐ HTML (தமிழ்) ரூ.40/=
- ☐ WORD (தமிழ்) ரூ.40/=
- ☐ EXCEL (தமிழ்) ரூ.40/=
- ☐ ACCESS (தமிழ்) ரூ.50/=
- ☐ PowerPoint (தமிழ்) ரூ.40/=
- ☐ HARDWARE(தமிழ்) ரூ.50/=
- ☐ Java Script (தமிழ்) ரூ.50/=
- ☐ VB Script (தமிழ்) ரூ.50/=
- ☐ Flash (தமிழ்) ரூ.50/=
- ☐ ASP (தமிழ்) ரூ.80/=

**சந்தா மற்றும் வேண்டுகை படிவம்**

பெயர்: ..............................

முகவரி: ..............................

காசுக்கட்டளையை 'COMPUTER ULAGAM' என்ற பெயருக்கு 'DEHIWALA' தபாலகத்தில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்ப வேண்டிய முகவரி,

COMPUTER ULAGAM
22-1/3, GALLE ROAD,
DEHIWALA.

# நாம் சுதந்திரக் காற்றை சுவாசிக்க மாவீரரின் தியாகங்களே காரணம்!

## உதவிப் பிரதேச செயலர் உரை

மாவீர்களுடைய நினைவுகள் எம்மால் என்றும் மறக்க முடியாதவை. இம்மாவீர்கள் செய்த தியாகங்களே இம்மண்ணில் இன்று ஓரளவுக்கேனும் நாம் சுதந்திரக்காற்றை சுவாசிக்க வழி ஏற்படுத்தியுள்ளன.

- இவ்வாறு குறிப்பிட்டார் நல்லூர் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி இ.இரட்ணராசா.

மாவீர் தினத்தையொட்டி மாவீர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நல்லூர் பிரதேச செயலாளர் வி.வி.முருகையா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அங்கு உதவிப் பிரதேச செயலர் உரையாற்றிய போது மேலும் தெரிவித்ததாவது:-

நானும் ஒருதாய் என்ற நிலையில் மாவீரரது பெற்றோர்களுடைய மனோநிலையையும் உணர்வுகளையும் என்னால் நன்கு புரிந்துகொள்ள முடிகின்றது. மாவீர்களுடைய பெற்றோர்கள் சமூகத்தினால் கட்டாயம் கௌரவிக்கப்படவேண்டியவர்கள்.

எமது அலுவலகத்தில் முதல் தடவையாக மாவீரர்களுடைய பெற்றோர்கள் மற்றும் சகோதரர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று இடம் பெறுகின்றது. இச்செயற்பாடு வரவேற்கக்கூடியதாகும் என்றார் அவர்.

உதவித் திட்டமிடல் பணிப்பாளர் க.ரவீந்திரராசசர்மா உரையாற்றும் போது கூறியதாவது:-

தமிழர்களின் நல்வாழ்விற்காகவும் சுதந்திரத்திற்காகவும் தம் இன்னுயிர்களை மாவீர்கள் இழந்துள்ளார்கள். இவர்களின் தியாகத்திற்கு நாம் அனைவரும் தலைவணங்கவேண்டும்.

இன்று விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்று அரசு பேச்சு நடத்த முன்வந்தமைக்கு இம்மாவீரர்களின் செயற்பாடு பிரதான காரணம் ஆகும் என்றார் அவர்.

## யாழ். நகரில் எமது புதியசேவை

உங்களுடைய விசேட வைபவங்களுக்கு சகலவித சைவ, அசைவ உணவுவகைகளும் சுடச்சுட, சுகாதாரமாக, சுவையுடன், குறித்தநேரத்தில் உணவு தயாரித்து வழங்கப்படும். (யாழ். மக்களின் சுவைக்கு ஏற்ப தயாரிக்கப்படும்)

Catering Facilities for all occasions

தங்குமிட வசதியும் உண்டு. (Lodging A/C, Non A/C Rooms)



சண்ஜெய பூட்லாண்ட்,
414, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel.: 021-2226600, 0777-144254.

Shanjaeya Food Land,
414, Hospital Rd,
Jaffna.
(24912)(34-31-18-17)

## கைதடியில்.....

யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும்

க.பொ.த.(சா/த)

### இலவச பாடக் கருத்தரங்கு - 2003

இடம்: கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

காலம்: 22.11.2003 (சனி),
23.11.2003 (ஞாயிறு)

காலை 9.00-1.00 மணி வரை

அனைவரும் பயன்பெறுக.

செயற்றிட்ட இயக்குநர்.

(C/31410)(34-17-18-25)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகரத்தினம் நாகரத்தினம்

கனகரத்தினம் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் திருச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் நாகரத்தினம் 19.11.2003 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

106, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திரு. திருமதி குகதாசன்
(மகள், மருமகன்).

(24911)(34-17-18-21)

### அருளப்பா தம்பிராசா (சின்னப்பு மாஸ்ரர்)

(ஓய்வுபெற்ற ஆசிரியர் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்,
கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், 5/7, அச்சக வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், கனடாவில் வசித்தவருமான அருளப்பா தம்பிராசா அவர்கள் 13.11.2003இல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்பா தம்பதியினரின் அன்புமகனும் எலிசபெத் (லண்டன்), காலஞ்சென்றவர்களான பிரகாசம், அன்னம்மா, சிங்கராயர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற மேரி திரேசாவின அன்புக் கணவரும் றூபி (கனடா), காலஞ்சென்ற பசில் மற்றும் ஜேம்ஸன் (கனடா), யஸ்ரின் (டுபாய்), அருட்தந்தை T.J. கிருபாகரன் (ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்); அன்ரன் (கனடா), ஜேன் (ஹொலண்ட்), ஐறின் (கொழும்பு), லலித்தா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பேட்டிரட்ணையா, பவளம், விமலா, லூர்து, யூடி, அகஸ்ரின், காலஞ்சென்ற ஜெயபாலன் (புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் லொறின், கெவின், ரெறன்சியா, அன்ரனி, பிரேமன், லொய்ஸ், அலிஸ், லக்ஷன், அலன், மரினா, நேருஜன் ஆகியோரின் பேரனும் ஏஞ்சல், இவேஞ்சல் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (22.11.2003) காலை 9.00 மணிக்கு கனடாவில் நடைபெறும். அன்றையதினம் 22.11.2003 பி.ப.4.30மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

5/7, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்தந்தை T.J. கிருபாகரன் (மகன்),
திருமதி லலித்தா ஜெயபாலன் (மகள்).

(24916) (26-17-18-35)

## அரசாங்க அறிவுறுத்தல்

### அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

### 2004 ஆம் ஆண்டுக்கான பொருள்கள், சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்து கொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் நிறுவனங்களும் மேற்படி வழங்குநர்களைப் பதிவு செய்துகொள்ள விண்ணப்பிக்கலாம்.

01. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
02. கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்கள்.
03. கிராம அபிவிருத்தி சங்கங்கள்.
04. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள்.
05. "சமுர்த்தி" முகாமையாளர்கள்.
06. உரிய அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்கள்.

**அ) பொருள்கள்:**

அ) 01. காகிதாதிகள், எழுதுபொருள்கள்
02. ஈர்க்கில் தடி, தும்புத்தடி, பாய்
03. பழைய பொருள்கள் (சவர்க்காரம், தீப்பெட்டி, விம், காப்பிக், சவர அலகு முதலியன)
04. மரத்தளபாடங்கள் வைத்தியசாலை பாவனைக்குரியவை (கட்டில்கள், மேசைகள், கதிரைகள், வாங்குகள், முதலியன)
05. துணிவகைகள் வைத்தியசாலை பாவனைக்குரியவை (சீருடைத்துணி, கோடிட்ட துணி, படுக்கை விரிப்பு, துவாய் முதலியன)
06. உருக்குத் தளபாடங்கள் வைத்தியசாலைப் பாவனைக்குரியவை (அலுமாரிகள், கட்டில்கள், சேலைன் நிலைகள் முதலியன)
07. கட்டடப்பொருள்கள் (சிமெந்து, பெயின்ற், ஆணிகள், கல், மணல் முதலியன)
08. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர், ரியூப், பற்றறிகள் முதலியன)
09. அரிந்த பனை மரங்கள், சலாகைகள், அரிந்த ஏனைய மரங்கள் (நிலைகள், ஜன்னல்கள், கதவுகள், உள்சீற் பொருத்துவதற்குரிய மரங்கள் முதலியன)
10. நீர் வழங்கு பொருள்கள் (பி.வி.சி. குழாய்கள் முதலியன)
11. ஏனைய பாவனைப் பொருள்கள் (பிளாஸ்ரிக் வாளி, குப்பைக் கூடை, சுவர் மணிக்கூடு முதலியன)
12. இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருள்கள் (பூட்டுக்கள்,வாளி, மண்வெட்டி முதலியன)
13. சப்பாத்துக்கள், இறப்பர் செருப்புகள்.
14. றெச்சின், பொலித்தின் வகைகள்.
15. மின்சார உபகரணங்கள், மின்சார உதிரிப்பாகங்கள் (வயர், மின்குமிழ்கள், கோல்டர், பிளக் முதலியன)
16. இறப்பர் முத்திரைகள்.
17. மருந்து வகைகள்.
18. மெத்தைகள் (சியெஸ்டா, தலையணைகள், நுளம்பு வலைகள் முதலியன)
19. அலுமினியப் பாத்திரங்கள் (சமையலறைக்குரிய பெரிய பாத்திரங்கள் உட்பட)

**ஆ) சேவைகள்**

அ. 01. உருக்குத் தளபாடத் திருத்தம்
02. மரத்தளபாடத் திருத்தம்.
03. மின்சார இயந்திர, மின்சார உபகரணத் திருத்தம் (குளிர்சாதனப் பெட்டிகள், தொற்று நீக்கி இயந்திரம், எக்ஸ் கதிர் இயந்திரம், மோட்டார்கள், மின் பிறப்பாக்கிகள், உயர் வைத்திய உபகரணம் உட்பட)

ஆ. 04. கட்டடத்திருத்தம்.
05. அச்சு வேலைகள் (படிவங்கள் முதலியன)
06. நீர் இறைக்கும் இயந்திரம், கழிவு அகற்றும் இயந்திரம் திருத்தம்
07. நீர் விநியோகம், மலசலகூட வடிகால் திருத்தம்.
08. போக்குவரத்துச் சேவை (பொருள்கள் ஏற்றி இறக்கல்)
09. மோட்டார் வாகனத் திருத்தம்
10. மோட்டார் வாகன சேவிஸ்
11. தட்டச்சு இயந்திரங்கள் திருத்தம், பிரதி எடுக்கும் இயந்திரம் (றோணியோ நிழற்பிரதி எடுக்கும் இயந்திரம், தையல் இயந்திரம், தொலைக்காட்சிப் பெட்டி, கணனி இயந்திரம் முதலியன சேவிஸ் உட்பட) திருத்தம்.
12. அடையாள அட்டைகள் (புகைப்படம் எடுத்துத் தயாரித்து வழங்குதல்
13. மோட்டார் மீள முறுக்குதல்
14. தையல் வேலைகள்.

மேற்படி சேவைகளுக்காகப் பதிவுசெய்துகொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தை எனது பணிமனையில் ரூபா 100/- பதிவுக்கட்டணமாகச் செலுத்திப் பெற்று 2003.12.26 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வைத்திய கலாநிதி
திரு. எஸ்.சதுர்முகம்
பணிப்பாளர்,
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி-31406) (25-18-17-21)

[illegible] யாழ்ப்பாணம்

# ஔவைக் குறளும்......

கற்பனை கடந்த ஜோதி, கருணையே உருவமாகி அற்புதக் கோலங்கொண்டு அவனியில் உதித்த அன்று 1926ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி திருவாதிரை நட்சத்திரத்திலாகும்.

திரு-ஆதி-திரை-ஆதியாகிய சிவன், திருவாகிய மங்களம் பொங்க



திரை-மாயையாகிய சக்தியுடன் சனாதன தர்மத்தை நிலைநாட்ட வந்த நாள். சிவசக்தி ரூபமாக அவதரித்தநாள். அனைத்திற்கும் ஆதி அதுவே ஜோதி. அது கொண்டது சிவசக்தி பாதி. பொன்னார் மேனியுடன் அந்த ஆதி ஜோதி அவதரித்தது. இதுவே எம்முள்ளும் உள்ள ஒளி. அதையே நீயும் தெளி - என்பது ஔவையின்மொழி; சிவஞானக் குறள்வழி.

*'ஈரொளி ஈதென்று இறைவன்*
*உரைத்தனன்*
*நீரொளி மீது நிலை' - நீரொளி*
*உந்திக் கமலத்து ஒளி.*
*'வெள்ளிப்பொன் மேனியது*
*ஒக்கும் வினையுடைய*
*உள்ளுடம்பின் ஆய ஒளி.*

அந்த ஒளியே சத்யம் ஆனது, நிதநியம் உள்ளது. எல்லோருள்ளும் உறையும் அன்பாகிய சாயி ஆனது. வழிநடத்தும் தந்தையாகிய பாபா வானது. சத்யமாகிய சிவனாகவும் அன்பின் படைப்பிற்குப் பிரம்மாவாகவும் வழி நடத்திக்காட்டும் விஷ்ணுவாகி, மும்மூர்த்திகளும் ஓர் உருக்கொண்ட சாயீஸ்வரன் உதித்தனன்.

அத்தகைய தெய்வீக ஒளியே கருக்கண்டு, உருக்கொண்டு "ஜோதி அது உன்னுள்ளிருந்து எழுவதை எட்டு இதயத்தைத் தட்டு மனதைக் கட்டு, தீமையை விட்டு" என்று கூறியது. அதற்கு வயது எழுபத்தெட்டு.

இவ்வொளிக்கு ஜாதி, மத பேதமில்லை. அனைவருள்ளும் உள்ளுறைவது. அவதாரங்கள் இந்த ஒளி ரூபமாகப் பிரவேசித்தவையே. அந்த ஒளியே பரமாத்மா என்று அழைக்கப்படுகிறது. அதன் வழியே வந்தவர்கள்தான் யேசு, புத்தர், மகாவீர், நபிகள் போன்றவர்கள். இதை மாணிக்கவாசகர் "தோற்றச் சுடரொளியாய்... மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்" என்று குறிப்பிடுகிறார்.

அந்த ஒளி ஞான ஒளி. அன்பின் ஒலி. போக்கும் முன்னைப்பழி. இது தான் காலம் நீவிழி. மனமாசை இன்றே ஒழி. உன்னுள் ஒளியைக் கண்டு களி. அனைத்திலும் இது

## சத்திய சாயியின் குரலும்......

உண்டென்று தெளி. அன்பினில் நாள்களைக் கழி. இதுவே சாயியின் மொழி. கடைத்தேற இதுவே நல்வழி. அப்பர் சுவாமிகளின் கூற்று. "நல்லாரை நன்மை அறிவாய் நீயே. ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே. பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே...." என்பதாகும்.

### ஞானக்கதிர்

ஆக, ஆதாரம் அவதாரம் ஆகியது. பூபாரம் நீக்கியெமைப் புனிதர்கள் ஆக்க, அவனே நாம் என்று சொல்லி ஊக்க, ஆனந்தம் என்றும் எம்முள் தேக்க, சிவஞானக்குரல் இங்கு ஆணையிடுகிறது.

*"உடம்பினைப் பெற்றபயன் ஆவ*
*தெல்லாம்*
*உடம்பில் உத்தமனைக் காண்"*

எப்போது காண்கிறோமோ அப்போதுதான் உண்மையில் பிறந்த நாள். உண்மை பிறந்தநாள், தன்னை அறிந்தநாள்.

இப்படி ஒளியான பரமாத்மா - குருவடிவாக - இறைவடிவாக - உத்தமனாக - இறங்கி வந்து உத்தமரான எம்முள் உணர்ந்து அனுபவித்து அதன் மயமாக்க, அதில் லயமாக்க இப்புண்ணிய தினங்களிலே யாது செய்ய வேண்டும்? நாம் புலன் வழி செல்லும் புறவழிபாட்டிலிருந்து அக வழிபாட்டிற்கு முன்னேற வேண்டும். அதுவே ஜோதீஸ்வரனுக்குச் செய்யும் சலனமில்லா வழிபாடாகும். இங்கும் அவ்வையின் சிவஞானக்குறள் வழி சொல்கிறது.

*"பிண்டத்திலுள்ளே பெயராது*
*இறைவனைக்*
*கண்டு தான் அர்ச்சிக்கு மாறு"*
*பிண்டம் - உடல்.*
*"பேராக் கருத்தினால்*
*பிண்டத்தின் உள் நினைந்து*
*ஆராதனை செய்யுமாறு"*

இதுவே பெரும் பேறு என்று மனம் ஆறு. அவனில் என்றும் ஊறு.

"வாடாமல் வழிபடென்றான் எங்கள் குருநாதன். அதுவே வையகத்தில் என்றும் வாழும் தன்மையைத் தரும்" என்றார் யோகசுவாமிகள். இங்கு சாயியின் குட்டிக்கதை ஒன்று பொருத்தமாகிறது.

அரசன் விக்கிரமாதித்தன் வேட்டையாட ஆழ நடுக்காடு வரை சென்றான். அங்கே ஒரு வெளி. அதிலிருந்து யாகப்புகை வருவதை அவதானித்து அருகே சென்று பார்த்தான். சாம்பல் மலைக்குவியல் போல் குவிந்திருந்தது. முனிவர் ஒருவர் யாகம் செய்து கொண்டிருந்தார்.

அரசன் அதுபற்றி முனிவரிடம் வினவியபோது முனிவர் "அரசே இறைவனைத் தேடி இந்த அமைதியான இடத்தை நாடி யாகம் செய்கிறேன். கடந்த அறுபது வருடங்களாகச் செய்ததின் பயனாக இந்தச் சாம்பல் குவியல் ஏற்பட்டதே தவிர ஏனோ இறைவன் காட்சி கொடுக்கவில்லை" என்றார் ஏக்கத்துடன்.

அதைக்கேட்ட அரசனுக்கு கழிவிரக்கம் தோன்ற "வானத்தை நோக்கித் தன்கைகளிரண்டையும் உயர்த்தி "இறைவா கருணைக் கடலே இவ்வளவு காலமும் யாகம் செய்யும் இவருக்கு அருள் புரியமாட்டாயா" என்று பிரார்த்தனை செய்த மறுகணமே இறைவன் அரசன் முன் தோன்றினார்.

"அரசே முனிவர் யாகமுறைகளையும் மந்திர உச்சாடனங்களையும் செய்கிறபோது அவருடைய கவனம் அடுத்து என்ன என்பதிலும், பிழை விட்டுவிடுவோமோ? என்பதிலேயே இருக்கிறது. ஆனால், நீயோ மனமொன்றி மனமுருக மற்றவருக்காகப் பிரார்த்தனை செய்தால் அதுதான் அவர் 60 ஆண்டுகளாகச் செய்ததிற்கு [illegible] விதத்தியாசம்" என்று கூறி மறைந்தார்.

[illegible]

*"மந்திரங்கள் எல்லாம்*
*[illegible]*
*[illegible]"*

[illegible] ஜோதி அது [illegible] இருப்பது? [illegible] சிவஞானக்குறள் இந்த வழி காட்ட வருகிறது.

*"[illegible]*
*[illegible]*
*[illegible]"*

- இந்த ஒளி [illegible] ஒளி. அறிவொளி. [illegible]

[illegible]

*"[illegible]"*

*[illegible] தெவிளாம்*
*[illegible]*
*[illegible]"*
*"மாசற்ற கொள்கை மனதில்*
*அடைத்தக்கால்*
*ஈசனைக் காட்டும் உடம்பு"*

உன்னத மனிதனின் உயர்ந்த வடிவம் இதுவே. அன்பே சிவமாகி வாழ்வை ஒளியாக்கும் வாழ்வைப் பெற்றவன், எல்லா உயிர்களையும் அன்பினால் ஈர்க்கிறான், தன்னையே அதற்கு வார்க்கிறான். இப்படி உயிர்களின் அன்பு செய்ய அவதாரம் ஆகிறது. அது உயிர்களை அன்பு செய்யும் ஆத்மாவாகிறது.


#### சிவஞானம் சிவபாலன்

இவ்வளவு படிகளையும் வேண்டா, நாளை மனம் என்ற 'காயத்திரி மந்திரம்', வழி காட்டும் 'ஒளித்தியானம்' [illegible]. [illegible] இறைவன் ஞானச்சுடராய் நம்முள் இருந்து வெளிப்படுகிறான். அதுவே 'தோற்றச் சுடரொளியாய் [illegible]' அந்த உணர்வில்லா [illegible] தன்னலமில்லா அன்பாகிப் [illegible] தன்னலமில்லா அன்பே சாயி. பணிசெய்வதே பாபா என்று மனித உருக்கொண்ட ஜோதி [illegible] [illegible] பெயர் சத்யசாயி பாபா. இதோ 'சிவஞானக்குரல்' முழங்குகிறது.

*"[illegible]*
*உயிர்களையும்*
*[illegible] நீ நினைந்து கொள்"*
*[illegible] பெருஞ்ஜோதி.*

[illegible]

## தெய்வீக ஸ்தலங்களில்



[illegible] கந்தசுவாமி கோவிலில் இடம்பெற்ற [illegible] போர் உற்சவத்தின் போது எடுக்கப்பட்ட படம்.
(படம்: வலி.கிழக்கு செய்தியாளர்)



ஆனைக்கோட்டை [illegible] ஆலயத்தில் [illegible] படம்.



யாழ். [illegible] கோவிலில் தீபாவளியையொட்டி இடம்பெற்ற விசேட [illegible] விசேட பூஜைகள் நடைபெற்ற [illegible] போது எடுக்கப்பட்ட படம்.

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொலீஸாருக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,நவ.21

நாட்டில் அதிகரித்துள்ள குற்றச் செயல்களை உடனடியாகக் கட்டுப்படுத்தி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலீஸாருக்கு ஜனாதிபதி பணித்துள்ளார்.

பதில் பொலீஸ்மா அதிபர் தலைமையிலான பிரதிப் பொலீஸ்மா அதிபர்களை கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்த போதே அவர் இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

குற்றச் செயல்களை ஒழிப்பதற்கான செயற்றிட்டத்தை இரண்டு வார காலத்துக்குள் நடைமுறைப்படுத்துமாறும் -

அதற்கு முன்னர் அதைத் தன்னிடம் சமர்ப்பிக்குமாறும் - ஜனாதிபதி, பிரதிப் பொலீஸ்மா அதிபர்களிடம் தெரிவித்துள்ளார்.

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக பொலீஸார் இன்னமும் ஒழுங்கான விசாரணைகளை மேற்கொள்ளவில்லை. இந்த விடயம் தொடர்பாகவும் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

குற்றச் செயல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டபோதும் உள்துறை அமைச்சர் இது பற்றிக் கவனம் எடுக்கவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டினார். (ஒ-8)

# ஏ-9 வீதியின் திருத்தப்பணி கடும் மழையால் பாதிப்பு

## போக்குவரத்திலும் நெருக்கடி

மண்டைதீவு,நவ.21

கடந்த சிலநாள்களாக வன்னிப் பகுதியில் பெய்துவரும் மழை காரணமாக ஏ-9 வீதித்திருத்த வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியில் உள்ள பாலங்கள், மதகுகள் என்பவற்றை புனரமைக்கும் வேலைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஆனையிறவு, உமையாள்புரம், பரந்தன், கிளிநொச்சி பகுதிகளில் அமைந்துள்ள பாலவேலைகளும், முருகண்டி, கனகராயன் குளப்பகுதிகளில் உள்ள மதகுவேலைகளும், வீதி வேலைகளும் தொடர்ந்து மேற்கொள்ள இயலாததால் பணிகள் தற்காலிகமாக முடங்கி இருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பரந்தனுக்கும் ஆனையிறவிற்கும் இடைப்பட்ட பகுதி மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மீசாலை - புத்தூர் சந்திக்கும் முகமாலைக்கும் இடையிலான வீதிப்பகுதிகளும் பாவனைக்குதவாத நிலையில் உள்ளன. இந்தப் பகுதிகளில் நடைபெற்று வந்த திருத்த வேலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த வீதியின் சிலபகுதிகள் வீதிப் போக்குவரத்திற்கு பொருத்தமற்று இருப்பதால், அந்தப் பகுதிகளின் அருகாக அமைந்துள்ள புகையிரத வீதிப்பகுதியை வாகனச் சாரதிகள் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-88)

# டிராக்டரில் இருந்து வீழ்ந்து காயம்!

யாழ்ப்பாணம்,நவ.21

ஓடிக்கொண்டிருந்த டிராக்டரில் இருந்து தவறுதலாக கீழே வீழ்ந்தவர் தலையில் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் நீர்வேலி பிரதான வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நீர்வேலியைச் சேர்ந்த சி.மனோகரன் (வயது 22) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

பிடரிப் பகுதியிலும் கை மற்றும் கால்களில் பலத்த காயங்களுக்கு உள்ளான இவர், யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.(எ-6)

# குமுதினிப் படகின் பரிதாப நிலை

நெடுந்தீவு துறைமுகத்தில் இருந்து திருத்த வேலைகளுக்கென எடுத்துவரப்பட்ட குமுதினி மோட்டார் படகு சுமார் பதினைந்து தினங்களுக்கும் மேலாக ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் எவ்வித திருத்தப் பணிகளும் இடம்பெறாத நிலையில் நிறுத்தப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறையில் இப்படகு நிறுத்தப்பட்டுள்ளபோதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் படகின் நிலை குறித்து பார்வையிடவில்லை என்றும் கூறப்படுகிறது. (ஒ-111)

# தேர்தல் சீர்திருத்தம்: யோசனை தயாரிக்க சு.க.குழு நியமனம்

தேர்தல் சீர்திருத்த முறை தொடர்பாக சிபாரிசுகளைத் தெரிவிக்க நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு சுதந்திரக் கட்சியின் யோசனைகளைத் தயாரிக்க அக்கட்சி ஐவர்கொண்ட குழு ஒன்றை நியமித்திருக்கிறது.

ரத்னசிறி விக்கிரமநாயக்க, ரொனி டி.மெல், சரத் அமுனுகம, டபிள்யூ. டி.ஜே.செனவிரத்ன, ரெஜினோல்ட் குரே ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இக்குழு த[illegible]சிபாரிசுகளை இரு வாரங்களுக்குள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று! இங்கிலாந்து வீரர் அண்டர்சன் விலகல் !!

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கட்போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஆர்.பிரேமதாஸ அரங்கில் பகல்-இரவு ஆட்டமாக இப் போட்டி நடைபெறுகிறது. இப்போட்டியில் இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் பங்குபற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கணுக்காலில் ஏற்பட்டுள்ள காயமே இதற்குக்காரணம்.

நேற்றுமுன்தினம் ஸ்குவாஷ் விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது ஜேம்ஸ் அண்டர்சன் காயமடைந்தார்.

அதனால், அவருக்கு பனிக்கட்டி சிகிச்சை அளிக்கப்பட்டது.

இது தொடர்பாக இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பேச்சாளர் நேற்றுக் கூறுகையில்,

இன்று காலையும் நாம் அவரை மீண்டும் பரிசோதித்தோம். ஆனால், நிச்சயமாக இரண்டாவது போட்டியை அவர் தவறவிடுவார் என்றார்.

இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை ஜேம்ஸ் அண்டர்சனுக்கு பதிலாக ஜேம்ஸ் கேர்ட்லி அல்லது கெரத படடி பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையுடனான டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து வீரர் ஸ்டீபன் ஹார்மிஸன் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அண்டர்சனின் காயம் அவ்வணிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

பங்களாதேஷுடனான டெஸ்ட் தொடரில் இரண்டாவது போட்டிக்கு முன்னர் ஹார்மிஸனுக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. அதையடுத்து அவா தாயகம் திரும்பினார். இலங்கையினுடனான டெஸ்ட் போட்டிகளில் அவர் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

அவர் இன்னும் போட்டிகளில் பங்குபற்றும் நிலைமையை அடையவில்லை என இங்கிலாந்து வேல்ஸ் கிரிக்கெட் சபை நேற்றுமுன்தினம் அறிவித்தது.

'ஒருவார காலத்துக்கு முன்னர் தேசிய அக்கடமியில் ஹார்மிஸன் பந்து வீசினார். சில நாளகளின் பின்னர் அவருக்கு உபாதை ஏற்பட்டது. திங்களன்று அவருக்கு உடல் தகுதி சோதனை நடத்தப்பட்டது. வலையில் இரண்டாவது சுற்றில் பந்து வீசிக் கொண்டிருந்த அவர் அதைத் தொடர முடியாதநிலை ஏற்பட்டது'

-இவ்வாறு இங்கிலாந்து வேல்ஸ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதேவேளை இன்றைய போட்டி இங்கிலாந்து அணிக்கு மிகவும் முக்கியமானதாகவுள்ளது.

இத்தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இன்றைய போட்டியிலும் இலங்கை வென்றால் அவ்வணிக்கு தொடரின் வெற்றியும் கிடைத்துவிடும்.

இன்றைய போட்டிக்கான அணியில அதிக மாற்றங்கள் இருக்காதெனத் தெரிவிக்கப்படுகிறது. கடைசி நிமிடத்தில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் தவிர தம்புள்ளை போட்டியில் பங்குபற்றிய அணியே மீண்டும் களமிறக்கப்படும்.

இவ்வாறு இலங்கைக் கிரிக்கட் சபை ஊடக முகாமையாளர் ரே. இலங்கக்கோண் தெரிவித்துள்ளார்.

ஆர்.பிரேமதாஸ மைதானம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமானதெனக் கருதப்படுவதால் சிலவேளை மூன்று சுழற் பந்துவீச்சாளர்கள் சேர்க்கப்பட இடமுள்ளது. மூன்றாவது சுழற்பந்து வீச்சாளராக குமார்தர்மசேன சேர்க்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விளம்பரப் படங்களில் நடிப்பதற்கு கிரிக்கெட் வீரர்களுக்குத் தடை!

## கலைஞர் கருணாநிதி யோசனை

விளம்பரப்படங்களில் நடிக்க கிரிக்கெட் வீரர்களுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்று கருணாநிதி கூறினார். தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்றுப் பேட்டியளித்தார்.

நேற்றுமுன்தினம் கருணாநிதியை சந்தித்த நிருபர்கள், ரி.வி.எஸ் கிண்ண இறுதிப்போட்டியில் இந்தியா தோல்வி அடைந்தது பற்றியும் கேட்டனர் அப்போது கருணாநிதி கூறியதாவது:-

இந்தியக் கிரிக்கெட் வீரர்களிடையே குழு ஒற்றுமை இல்லை என்பதை நான் நீண்டகாலமாக கூறிவருகிறேன். சதம் எடுப்பதில் சாமர்த்தியசாலியான 'டெண்டுல்கர்' இந்த இறுதிப் போட்டியில் 45 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார்.

-லக்ஷ்மன் மனதாரச் சரியாக ஆடாதது மட்டுமல்ல; மூன்று பந்துகளை பிடிக்கத்தவறியதும்-இந்தத் தோல்விக்கு முக்கிய காரணங்களாகும். 'ஆட்டநாயகன்' என்ற விருதாவது இந்தியாவுக்கு மிஞ்சியதே; அதில் ஒரு மகிழ்ச்சி!

இந்த நேரத்தில் ஒன்றை சிறப்பாக குறிப்பிட்டாகவேண்டும். 'கிரிக்கெட் வீரர்கள் விளம்பரப் படங்களில் நடிப்பதை அவர்களாகவே தவிர்த்துக்கொள்ள வேண்டும் அல்லது தடுக்கப்படவேண்டும்.'

- இவ்வாறு கருணாநிதி கூறினார்.

# இந்திய அணிக்கு அக்ரம் பயிற்சியளிக்க தடை விதிக்குமாறு நீதிமன்றிடம் கோரிக்கை

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சுப் பயிற்றுநராக பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவா வஸிம் அக்ரம் பொறுப்பேற்பதை தடுக்குமாறு கோரி, பாகிஸ்தான் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

வஸிம் அக்ரமை வேகப் பந்து வீச்சுப் பயிற்றுநராக நியமிக்குமாறு இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி, பயிற்றுநர் ஜோன் ரைட் ஆகியோர் ஆலோசனை வழங்கினர்.அதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்றுக் கொண்டுள்ளது என செய்திகள் வெளியாகியமையை அடுத்தே இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் லாகூரிலுள்ள நீதிமன்றமொன்றில் நேற்றுமுன்தினம் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இன்று வெள்ளிக்கிழமை இது தொடர்பாக தமது விளக்கத்தை அளிக்குமாறு அக்ரமிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

எந்தவொரு கிரிக்கெட் சங்கத்தையும் சாராத, பாக். பிரஜையான நஜமல அப்பாஸ், இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்தியா எமது எதிரியாகும் எதிரிக்கு பயிற்சியளிப்பதற்கு அக்ரமிற்கு அனுமதியளிக்கக் கூடாது. இது பாகிஸ்தானில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் இந்திய இராணுவதிற்கு பயிற்சி அளிப்பதைப் போன்றது.

- இவ்வாறு தமது மனுவில் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

அப்பாஸின் சட்டத்தரணியான மொஹமட் பஜ்வார் இது தொடர்பாக கூறுகையில்-

"அக்ரம் ஓர் அணு ஆயுதம் போன்றவர். இந்திய அணி எதிர்வரும் டிசெம்பர் மாதம் பாகிஸ்தானுக்கு வரவுள்ள நிலையில், இந்திய வேகப் பந்து வீச்சாளர்களை அக்ரம் வளர்ப்பதை பாக். கிரிக்கெட் சபை தடுக்க வேண்டும்" என்றார்.

இந்த சட்டத்தரணியே மதுபான விளம்பர ஆட்சேப வழக்கொன்றிலும் அக்ரமிக்கு எதிராக வாதாடி வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,நவ.21

எல்லைப்படை மாவீரர்கள் ஞாபகார்த்தமாக தமிழீழ விளையாட்டுத் துறையினால் யாழ்.மாவட்ட உதை பந்தாட்டலீக் அணிகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணி முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

★ கரவெட்டி கலட்டி ஐக்கிய வி.க. எதிர் கொக்குவில் பொற்பதி வி.க.

★ மாதகல் பற்றிமா மேரிஸ் வி.க. எதிர் அல்வாய் நண்பர்கள் வி.க. (ஞ-5-86)

## உதைபந்தாட்ட வீரருக்கு பிணை

பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டுக்குள்ளான இங்கிலாந்து உதைபந்தாட்ட வீரர் ஒருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரபல லீட்ஸ் யுனைடட் கழகத்தின் நட்சத்திர வீரர்களில் ஒரவரான ஜோடி மொரிஸ் மற்றும் சிலருடன் சேர்ந்து 20வயதான யுவதியொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் இச்சம்பவம் நடந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக ஜோடி மொரிஸை கைது செய்து பொலீஸார் நேற்று முன்தினம் லண்டன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ள மொரிஸின் நண்பர் ஒருவரும் நீதிமன்றில் ஆஜரானார்.

# விளையாட்டு

# டால்மியா, அக்ரம் மறுப்பு

அக்ரமின் நியமனம் தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவிக்கும் தகவல்கள் முரண்பாடானவையாக உள்ளன.

"ஆஸ்திரேலிய சுற்றுலாவின் போது ஆலோசகராகப் பணியாற்ற முடியுமா என்பது குறித்து அக்ரமிடம் நாம் பேசிவருகின்றோம்" - இவ்வாறு இந்தியக் கிரிக்கெட்சபையின் சிரேஷ்ட அதிகாரிகளில் ஒருவரான ஜோதி வாஜ்பாய் கூறியுள்ளார்.

ஆனால், இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவர் ஜகமோகன டால்மியா இதை முற்றாக மறுத்துள்ளார்.

"வஸிம் அக்ரமை இந்திய அணியின் பயிற்றுநராக நியமிக்கும் திட்டம் எம்மிடம் இல்லை. இவ்வாறான ஊகங்களை ஏன் வெளியிடுகின்றனர் எனத் தெரியவில்லை. இதுகுறித்து நாம் யோசிக்கவும் இல்லை" - இவ்வாறு டால்மியா நேற்று முன்தினம் கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக வஸிம் அக்ரம் கூறுகையில்,

" எனக்கு இதுவரை அழைப்பு எதுவும் கிடைக்கவில்லை பத்திரிகைகள் மூலமாகத்தான் இவ்வாறான செய்திகளை அறிந்தேன்" - என்றார்.

அதேவேளை " நான் இருபது வருட காலம் கிரிக்கெட் விளையாடியுள்ளேன். இந்தியாவுக்கு மட்டுமல்ல எந்தவோர் அணிக்கும் நான் பயிற்சி வழங்குவதை விரும்புகின்றேன் எனவும் அக்ரம் கூறினார்.

37 வயதான அக்ரம் தற்போது ஈ.எஸ்.பி.என். - ஸ்டார் ஸ்போட்ஸ் தொலைக்காட்சிஅலைவரிசையில் வர்ணனையாளராகப் பணியாற்றுகின்றார். தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிற்காக தற்போது இந்தியாவுக்குச் சென்றுள்ள அக்ரம் இவ்வார இறுதியில் இந்தியக் கிரிக்கெட் சபை அதிகாரிகளைச் சந்திக்கவிருக்கின்றார்.

இந்திய அணிக்கு அல்லாமல் பாகிஸ்தான் அணிக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என பாக். கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் தாகிர் ஸியா தெரிவித்துள்ளார்.

"நிச்சயமாக அக்ரம் எமக்குத் தேவைப்படுகின்றார். அவர் மிகச் சிறந்த பந்துவீச்சாளர். சிறந்த சகலதுறை வீரரும் கூட எமது வேகப் பந்து வீச்சுத்துறையை விருத்திசெய்வதற்கேற்ற வேலைவாய்ப்பொன்றை அவருக்கு வழங்க நாம் விரும்புகின்றோம்.

ஒருவர் தமது பெற்றபுகழ் மற்றும் அனைத்தையும் பெற்ற நாட்டிற்கு கைமாறு செய்வதற்கான உகந்த தருணம் இது.

- இவ்வாறு தாகீர் ஸியா தெரிவித்துள்ளார்.

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.21

'பூபாலசிங்கம்' ஞாபகார்த்தமாக திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவர் விளையாட்டு கழகத்தினால் நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7மணி முதல் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ இரவு 7 மணி - அரியாலை ஐக்கிய வி.க. அணி எதிர் உடுப்பிட்டி சிவகுமாரன் வி.க. அணி.

★ இரவு 8 மணி - அச்சுவேலி தோப்பு வி.க.அணி எதிர் யாழ் ஐங்கரன வி.க. அணி.

# கெப்லர் வெசல்ஸ் மீது இனவாதக் குற்றச்சாட்டு

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான கெப்லர் வெஸலஸ், இனவாதக் கருத்துக்களை வெளியிட்டார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனால், தென்னாபிரிக்காவின் கிழக்கு மாகாண அணியின் பயிற்றுநர் பொறுப்பிலிருந்து அவரை இடைநிறுத்துமாறு தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது.

இவ்வருட முற்பகுதியில், கெப்லா வெஸலஸ், இனவாதக் கருத்துக்களை தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.

"கிழக்கு மாகாண அணியின் பயிற்றுநர் பொறுப்பிலிருந்து கெப்லர் வெஸலஸை இடைநிறுத்துமாறும் இது தொடர்பாக விசாரணை முடியும் வரை அவரின் சம்பளப் பணத்தை தடுத்து வைக்குமாறும் கிழக்கு மாகாண சங்கத்திற்கு உத்தரவிட்டுள்ளளோம்.

வெஸல்ஸுக்கு எதிரான ஒழுங்காற்று விசாரணை இன்னும் சில நாட்களில் நடத்தப்படும்"

- இவ்வாறு தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை கூறியுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குறித்த மேலதிக விவரங்கள் வெளியிடப்படவில்லை.

"இவ்விசாரணை இயன்றவரை விரைவாக நடத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறேன்" என கெப்லர் வெஸல்ஸ் கூறியுள்ளார். தென்னாபிரிக்காவைச் சேர்ந்த, கெப்லர் வெஸல்ஸ், சில வருடங்கள் ஆஸ்திரேலிய அணி சார்பிலும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றினார்.

1992ஆம் ஆண்டின் தென்னாபிரிக்க அணி மீண்டும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்ற ஆரம்பித்தபோது அவ்வணிக்கு தலைமை தாங்கினார். தற்போது 46வயதான வெஸல்ஸ் 40 டெஸ்போட்டிகளில் 2788 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.


அன்பே சிவம்
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகெலாம்

உடுவிற் கல்விக்கோட்டம்

வருடாந்த சைவத் திருமுறை விழாவும் பரிசளிப்பு வைபவமும்-2003

நீற்சைசெய்யுள் மனனம். திருமுறைப் பண்ணிசை.
தொண்டுபடு சேமன்முறை. கதாப்பிரசங்கம். புராண படனம்.

இடம்: யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம்.
காலம்: சுபானு வருஷ கார்த்திகைத்திங்கள் 06 ஆம் நாள் 22.11.2003 சனிக்கிழமை முற்பகல் 8.00 மணி.
தலைவர்: திரு.செ.குபேரநாதன் அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர். உடுவிற் கல்விக் கோட்டம்)

நிகழ்வுகள்

காலை 8.00 மணி: யா/கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி முருகன் ஆலயத்தில் பூசை வழிபாடு.
8.30 மணி: மேற்படி ஆலயத்திலிருந்து திருமறைச் சுவடிகள், சமய குரவர் நால்வரினது திருவுருவப் படங்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரது திருவுருவப்படம் என்பன விழா மண்டபத்திற்கு திருவுலா வருதல்.
9.00 மணி: மங்கள விளக்கேற்றல், பஞ்சபுராணம் ஓதுதல். கோட்ட கீதம் இசைத்தல்.
வரவேற்புரை: திரு.க.செல்வக்குமரன் அவர்கள்
(அதிபர், யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம்)
ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள்
(நல்லை திருஞான சம்பந்த ஆதீன இரண்டாவது குரு சந்நிதான முதல்வர்)
சிவஸ்ரீ ப.ஜெயக்குமாரக்குருக்கள்
(பிரதம குரு மருதடி விநாயகர் தேவஸ்தானம்)
கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர், துர்க்கா தேவஸ்தானம், தெல்லிப்பழை)
வாழ்த்துரை: திருமதி றெஜினா இருதயநாதன்
(வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)
திரு.அ.தற்பரானந்தன்
(சமாதான நீதிவான், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)
திரு.சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்
(உதவிப்பணிப்பாளர், இந்து கலாசார அமைச்சு)
திரு. செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்
(ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
திரு.கு.சண்முகநாதன்
(அதிபர். மானிப்பாய் இந்துக் கல்லூரி)
சிறப்புரை: கடல்கடந்த நாடுகளில் சைவசமய கலாசாரம்
"முத்தமிழ் குருமணி" சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்
(பிரதம குரு ஸ்ரீகதிரைமலைச் சிவன் தேவஸ்தானம் சுன்னாகம்)

நிகழ்ச்சிகள்
1) பண்ணிசை. யா/சைவ சன்மார்க்க வித்தியாலயம்
2) பண்ணிசை. யா/இராமநாதன் கல்லூரி
3) கதாப்பிரசங்கம். யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
4) பரிசில் வழங்கல்
5) நன்றியுரை

"இந்துவாக வாழ்வோம் இந்து தர்மம் காப்போம்"
விழாக்குழு.

விளம்பர அன்பளிப்பு: (C81417)(34-11-12-33)
சுவர்ணா பேக்கரி,
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

இன்று
மங்களகரமான ஆரம்பம்

# கலையகம்

சேவைகளுக்கும் விற்பனைகளுக்குமான நிறுவனம்

- ✦ மணப்பெண் ஒப்பனைச் சேவை
- ✦ வைபவ கேக், ஐசிங் அலங்கரிப்பு சேவை
- ✦ மணப்பெண் அலங்கரிப்புக்கான உபகரணங்களின் வாடகைச் சேவை
- ✦ கைவினைப்பொருள் மூலப்பொருள் விற்பனைச்சேவை
- ✦ கொம்பியூட்டர் பிறிண்டிங், ஸ்கிறீன் பிறிண்டிங் சேவை

இன்னும் பல சேவைகள்
உங்களை நாடி வருகின்றன.

**கலையகம்**
360, கோயில் வீதி, நல்லூர்.
(சிவன் - அம்மன் வீதிச் சந்தி)

நிறுவன அங்கத்துவம்
எமது நிறுவனத்தில் அங்கத்துவம் பெறுவோர்க்கு பொருள்கள் சேவைகளில் 20% வரை சலுகைகள். செய்யப்படவுள்ளன.

(சி-31416) (26-21-13-14) - நிறுவனத்தினர்


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 22 |
| ~ | ~ |
| 07 | 10 |
| ~ | ~ |
| 1931 | 2003 |



## அமரர் வடிவேலு பூலோகராசா

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம்முன் வாழ்ந்திட்ட
அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக் கிருத்தியமும் அன்னாரின் இல்லத்தில் இன்று (21.11.2003) வெள்ளிக்கிழமை நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

18/8. கொண்டலடி வீதி,
நல்லூர்.
(24918)(35-13-18-21)

தகவல்:
மனைவி. பிள்ளைகள்.
மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமு கிருஷ்ணன்

**(முறிவு நெரிவு வைத்தியர் - மீசாலை வடக்கு, புத்தூர் சந்தி)**

மீசாலை வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு கிருஷ்ணன் 19-11-2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் சின்னராசா (லண்டன்), தங்கராசா (பிரான்ஸ்) பரமேஸ்வரி, ஈஸ்வரி, ராதா (பிரான்ஸ்) பிரபாகரன் (கெயர் நிறுவன உத்தியோகத்தர், மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மசகுந்தனாதேவி (லண்டன்), ஜீவரத்தினம் (பிரான்ஸ்), பவளேந்திரன் (ஆசிரியர் - யா/வரணி மகா வித்தியாலயம்), சின்னராசா (மருதங்கேணி) சிவபாதம் (பிரான்ஸ்) மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீபன், கஜதீபன், ஜெகதீபன், நவாணி (லண்டன்), சாளினி (லண்டன்), தர்சினி (லண்டன்), பிரேம்குமார் (லண்டன்), நிவேதிகா (லண்டன்), ரஜீவன (பிரான்ஸ்), லட்சிகா (பிரான்ஸ்), கிருஷாந் (பிரான்ஸ்), கிருஷாந்தி (பிரான்ஸ்), பிரசாத் (பிரான்ஸ்), அனுராஜ், சிந்துஜா, வினோராஜ், கீர்த்திகா, பிரதீப் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்லையா, சின்னத்துரை ஆகியோரின் சகோதரரும், செல்லையா, கந்தசாமி, கனகம்மா, சிவபாக்கியம், பொன்மணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*புத்தூர்ச் சந்தி* (24919) (21-13-17)

தகவல்:
சி.பவளேந்திரன்,
செ.சின்னராசா (மருமகன்மார்)

## திருமதி ரூத் மகேஸ்வரி பாலசிங்கம்

கரவெட்டி மத்தியை சேர்ந்த திருமதி ரூத் மகேஸ்வரி பாலசிங்கம் அவர்கள் 19.11.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை அன்னாரது இல்லத்தில் நாளை (22.11.2003) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெத்தேல்,*
*கரவெட்டி மத்தி, கரவெட்டி.* (2-1-17-13)

தகவல்:
B.C.பாலசிங்கம்
(கணவர்)
(சி-31415)

# வங்கியாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.21

வங்கிகளில் பணியாற்றி இளைப்பாறிய மற்றும் வேறு வகையில் விலகிச் சென்ற மூத்த வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நொயல் ஏ.விமலேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ஓ-10)

# கட்டாக்காலிகளால் வயல்கள் நாசம்!

வலி.மேற்கு,நவ.21

பொன்னாலை, மூளாய், சுழிபுரம் ஆகிய இடங்களிலுள்ள வயல் நிலங்களில் நெற்பயிர்கள் கட்டாக்காலி மாடுகளினால் சேதமாக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் கடந்த சில நாள்களாக இரவு நேரங்களில் கட்டாக்காலி மாடுகள் வயல் நிலங்களில் புகுந்து பயிர்களை சேதமாக்கியுள்ளதாக இப்பகுதி விவசாயிகள் கிராம அலுவலர்களிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இப்பகுதிகளைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை காலம் தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டும் - என்றும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஓ-175)

## தேவை

எமது நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர், CLERK உடன் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**NEW SCIENCE CENTRE**
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்

## அனைத்துப் பீட மாணவர்களுக்குமான அறிவித்தல்

Dialog G.S.M இன் விசேட சலுகையிலான இணைப்பைப் பெற தங்கள் பெயரைப் பதிவு செய்தவர்களும், பதிவு செய்ய விரும்புபவர்களும், இதுவரை **பணம்** செலுத்தத் தவறியோரும் எதிர்வரும் **24-11-2003** (திங்கட்கிழமை) இற்கு முன்பாக பணத்தைச் செலுத்தி பதிவினை மேற்கொள்ளவும். மாணவர் நலன் கருதி சனி, ஞாயிற்றுக்கிழமைகள் உட்பட திங்கட்கிழமை வரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

*யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.*

(24920) (21-17-20)

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. து)

# எலற்றிக் வெல்டர் தேவை

எமது சங்கத்தில் எலற்றிக் வெல்டிங் பகுதிக்கு வெல்டர் ஒருவர் தேவை. தகுதியானோர் சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தைப் பெற்று "பொது முகாமையாளர், சங்கானை ப.நோ.கூ.சங்கம், சங்கானை" என்ற விலாசத்துக்கு 30.11.03ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

18.11.2003
(C/31414)(35-21-17-18)

பொதுமுகாமையாளர்.
சங்கானை ப.நோ.கூ.சங்கம்.

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## அருள்பிரதாசன் முரளிதரன்
(கலைவாணி நகைமாளிகை உரிமையாளர்)

தோற்றம் 12.12.1976 — மறைவு 20.11.2000

*ஊர் போற்றும் உத்தமரே!*
*நீர் விண்ணுலகம் சென்றாலும்*
*நித்தமும் எம்முடனே இருக்கின்றீர்!*

உங்கள் பிரிவால் வாடும்:
மு.யசோ
(மனைவி)

தகவல்:
ஆ.பாலச்சந்திரன் (மாமா)
*தும்பளை, பருத்தித்துறை*
(24900)(21-13-17-22)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்




உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2171128 இருந்து
2188560 வரை
சீட்டிழுப்பு இல. 1454
திகதி 19.11.2003




## வெற்றி எண்கள்

**12 23 24 54 56** — போனஸ் எண் **42**

## ஜக்பொட் பரிசு
# ரூபா.2,348,900/- வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 2,348,900/- | 2,348,900/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 99 | 10,000/- | 990,000/- |
| 3 | 5,428 | 500/- | 2,713,000/- |
| 2 | 91,031 | 20/- | 1,820,620/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 12ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 111,179 | 10/- | 1,111,790/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.9,284,310/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
## ரூபா.1,500,000/-

தொடர் இல. 3140823க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 நவம்பர் 22ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2178055-7-82
2180712-4-52
2179430-7-57
2173699-2-58
2171876-8-17

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# நாய்த் திருநாட்டுக்கு கௌரவம் தேவையா?

யாழ்ப்பாணம்,நவ.21

அண்மையில் குருநாகலில் நடந்து முடிந்த தேசிய விளையாட்டு விழாவில் தமிழ்மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டிப் புத்தகத்தின் சத்தியப்பிரமாணப் பகுதியில் மிகமோசமான தமிழ்க்கொலை இடம்பெற்றுள்ளது. "எமது தாய்த் திருநாட்டின் கௌரவத்துக்காகவும், விளையாட்டின் அழியாப் பெருமைக்காகவும்...." என்று அச்சிடப்படவேண்டியது "நாய்த் திருநாட்டின் கௌரவத்திற்காகவும்...." என அச்சிடப்பட்டுள்ளது.

குருநாகலில் தேசிய விளையாட்டு விழா நடைபெற்ற மைதானங்களில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த அனைத்து விளம்பரங்களும் அறிவித்தல்களும் சிங்கள மொழியிலேயே எழுதப்பட்டிருந்தன. இவ்விழாவிற்காகப் பறக்கவிடப்பட்ட வர்ணக்கொடிகளில் ஆங்காங்கே ஆங்கில எழுத்துக்கள் காணப்பட்டன. எனினும் எதிலும் தமிழ்மொழி காணப்படவில்லை.

இந்தத் தேசிய விளையாட்டு விழாவில் சுமார் 400 தமிழ் விளையாட்டு வீரர்களும் பல தமிழ் விளையாட்டு அதிகாரிகளும் பங்குபற்றினர். அங்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் அறிவித்தல்கள் என்பன சிங்கள மொழியில் அமைந்திருந்ததால் இவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

போட்டியின் இறுதிநாள் நிகழ்வில் மட்டும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ ஆகியோர் சிங்கள மொழியில் ஆற்றிய உரைகள் மிகச் சுருக்கமாக தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன.

வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் முற்றுமுழுதாகச் சிங்கள மொழியிலேயே அச்சிட்டு வழங்கப்பட்டன.

தேசிய விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப காலத்தில் இத்தகைய சிக்கல்கள் இல்லாமல் இருமொழிகளுக்கும் பொதுவாக ஆங்கில மொழியில் சான்றிதழ்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன.

கடந்த மூன்று வருடங்களாக அந்த நடைமுறைகள் மாற்றப்பட்டு சிங்கள மொழியில் மட்டுமே சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

விளையாட்டு அமைச்சின் இந்த நடவடிக்கைக்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து பங்குபற்றும் வீர வீராங்கனைகளும் விளையாட்டு




தனிச்சிங்களத்தில் அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்கள்

உத்தியோகத்தர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். கடந்த வருடம் சிங்கள மொழியில் அச்சிடப்பட்ட சான்றிதழை வாங்காது அவர்கள் புறக்கணித்தனர்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடத்தப்படும் மாகாண மட்டப் போட்டிகளில் தமிழர்களுக்கு தமிழ்மொழியிலும், சிங்களவர்களுக்கு சிங்கள மொழியிலும் சான்றிதழ்கள் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அறிவித்தல்கள் மற்றும் வர்ணனைகளில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது மட்டுமல்லாது அது சார்பாக வெளியிடப்பட்ட வாழ்த்து மலரிலும் தமிழ்கொலை நிறையவே இடம்பெற்றுள்ளது.

தேசிய விளையாட்டு விழாவின் வாழ்த்து மலரில் வீரர்களின் சத்தியப்பிரமாணம் என்று அச்சிடப்பட்ட பகுதியில் "எமது தாய்த் திருநாட்டின் கௌரவத்திற்காகவும் விளையாட்டின் அழியாப் பெருமைக்காகவும் அதன் சட்டதிட்டங்களுக்கு அமைவாக விளையாட்டு வீரனுக்குரிய உண்மையான உணர்வுடன் பங்குகொள்ள நாம் உறுதி கூறுகிறோம்" என்று எழுதப்பட வேண்டிய வாசகம்.

"எமது நாய்த் திருநாட்டின் கௌரவத்திற்காகவும், விளையாட்டின் அழியாப் பெருமைக்காகவும், அதன் சட்டத்துடங்களுக்கு அமைவாக, விளையாட்டு வீரனுரிய உண்மையான உணர்வுடன் பங்குகொள்ள நாம் உறும் உறுதி கூறுகின்றோம்" என்று எழுதப்பட்டுள்ளது.

இந்த வாசகம் ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் சரியாக எழுதப்பட்ட போதும் தமிழ் மொழியில் தவறாக எழுதப்பட்டதற்கு யார் காரணம்? இதனை விளையாட்டு அமைச்சில் கடமையாற்றும் தமிழ் அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லையா? அல்லது அந்த அமைச்சர் சார்ந்த திணைக்களங்களிலும் அமைச்சிலும் தமிழ் தெரிந்தவர்கள் இல்லையா? ஏன் இந்த தமிழ்க்கொலை என்று தமிழ் மொழிப்பற்றாளர்களும், தமிழ் வீரவீராங்கனைகளும் கேள்வி எழுப்புகின்றனர்.

இலங்கையில் சிங்களமும், தமிழும் தேசிய மொழிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான அமைச்சுக்கள் தற்போது தமது அறிக்கைகள், விளம்பரங்கள் என்பவற்றில் தமிழ்மொழிக்கு ஓரளவு இடம்கொடுத்துச் செயற்படுகின்றன. ஆனால், விளையாட்டுத்துறை அமைச்சு மட்டும் தனிச்சிங்களத்தில் தனது நடவடிக்கைகளை மேற்கொள்வது மனதுக்கு வேதனையளிக்கிறது எனத் தெரிவித்தார் ஓய்வுபெற்ற விளையாட்டு அதிகாரி ஒருவர்.

இந்தத் தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் பின்னர் அது இறுதி நேரத்தில் மாற்றப்பட்டது. (ம-5)

ක්‍රීඩක ප්‍රතිඥාව

"අප උතුම් මාතෘ භූමියේ ගෞරවය සඳහාත්,
ක්‍රීඩාවේ සදා මහිමය සඳහාත්,
තරඟ නීති වලට අවනතව
නියම ක්‍රීඩකත්වය ආරක්ෂා කරමින්
2003 වර්ෂයේ පැවැත්වෙන
XXIX වැනි ජාතික මහා ක්‍රීඩා උළෙලට
සහභාගීවන බවට මෙයින් අපි ප්‍රතිඥා දෙමු."

சத்தியப்பிரமாணம்

2003 நடத்தப்படவுள்ள XXIX வது மாபெரும்
தேசிய விளையாட்டு விழாவில்
எமது நாய்த் திருநாட்டின் கௌரவத்திற்காகவும்,
விளையாட்டின் அழியாப்பெருமைக்காகவும்,
அதன் சட்டத்துடங்களுக்கு அமைவாக,
விளையாட்டு வீரனுரிய உண்மையான உணர்வுடன்
பங்குகொள்ள நாம் உறும் உறுதி கூறுகின்றோம்

FESTIVAL OATH

"We promise that we shall take part in the
XXIX National Sports Festival of 2003
in Loyal Competition respecting
the regulations which govern them and
desirous of participating in them
in the true spirit of Sportsmanship for the
Honour of our country and
of the glory for sports."

தமிழ்மொழிக் கொலையுடன் அச்சிட்டு விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்ட சத்தியப்பிரமாணம்.



செல்வச்சந்நிதி முருகன் கோயிலின் புதிய சித்திரத்தேர் நிர்மாணத்திற்கான அங்குரார்ப்பண விழா நேற்றுமுன்தினம் கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவிலில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்

## பதிவாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக விவாக, பிறப்பு மற்றும் இறப்புக்களைப் பதிவுசெய்வதற்கான பதிவாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்தால் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாணப் பகுதிக்கும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நல்லூருக்கும் தெல்லிப்பழையில் வலி. வடக்குப் பிரிவிற்கும், மருதங்கேணியில் செம்பியன்பற்று மற்றும் குடத்தனைக்கும் சண்டிலிப்பாயில் பண்டத்தரிப்பு பகுதிக்கும் -

ஊர்காவற்றுறையில் அனலைதீவுக்கும் காரைநகருக்கும் வேலணையில் அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளுக்கும் நெடுந்தீவில் நெடுந்தீவு கிழக்கு, நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு மத்திய பகுதிகளுக்கும் -

பருத்தித்துறையில் கட்டைவேலி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளுக்கும் -

கரவெட்டியில் உடுப்பிட்டி, கரவெட்டி வடமராட்சிப் பிரிவு 1, வடமராட்சி பிரிவு II ஆகிய பகுதிகளுக்கும் பதிவாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

உரிய பிரதேசத்தில் நிரந்தரமான வசிப்பிடத்தைக் கொண்ட 21 வயதிற்கும் 60 வயதிற்கும் உட்பட்ட திருமணம் செய்த இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

இதுதொடர்பான விண்ணப்பங்களை மாவட்ட செயலாளர் மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களை மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலர் அலுவலகங்கள் கிராம சேவகர் அலுவலகங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சபைகள் என்பவற்றில் பார்வையிடலாம்.

பூர்த்திசெய்த விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் 'மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு பதிவாளர் நாயகம் என்.கே.ரத்னஸ்ரீ கேட்டுள்ளார். (ஒ-5)

## ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கு!

மானிப்பாய் றோட்டரக்ட் கழகம் நடத்தும் ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று முதல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் விஞ்ஞான பாடம் தொடர்பாக ஆசிரியர் கஜனும் -

நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் ஆசிரியர் குமரன் தமிழ்ப் பாடத்திலும் -

பிற்பகல் ஒரு மணிமுதல் ஆசிரியர் ஆர்.எஸ்.சந்திரன் சமூகக்கல்வி பாடத்திலும் -

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் ஆங்கிலப் பாடம் தொடர்பாக திருமதி ரட்ணசிங்கமும் -

பிற்பகல் 10.45 மணிமுதல் தமிழ்ப் பாடம் தொடர்பாக ஆசிரியர் மகேந்திரனும் - கருத்துரை வழங்கவுள்ளனர்.

## நல்லூர்ப் பகுதியில் கிணறுகள் அமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.21

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நிதியுதவியுடன் இருகிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

திருநெல்வேலி பரலக்குளம் சிவன் கோவிலடிப் பகுதியிலும் கோண்டாவிலில் உள்ள மக்கள் குடியிருப்புப் பகுதியிலும் இக்கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இதற்கான வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஒ-6)

## திரைப்படக்காட்சி

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் 'ஷியாம் பிரசாத்' நெறியாள்கையில் உருவான 'அக்னி சாட்சி' என்னும் மலையாளத் திரைப்படம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புலியபற்றுறை மண்டபத்தில் ஆங்கில உபதலைப்புகளுடன் காண்பிக்கப்படும். (ம-5)

## நூல்கள் மற்றும் பொருள்கள் சீநோருக்கு வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,நவ.21

குருநகரில் இயங்கிவரும் வடகடல் நிறுவனத்திற்கு (சீநோர்) கடந்த 13 ஆம் திகதி 2 லட்சத்து 28 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் மற்றும் பொருள்கள் வந்துசேர்ந்துள்ளன.

வலை பின்னுவதற்கான நூல்கள் மற்றும் உபகரணங்கள் என்பன சீநோரின் கொழும்பு தலைமைச் செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிறுவனத்தில் ஆறு இயந்திரங்கள் இருக்கின்ற போதிலும் கடந்த இந்த மாத ஆரம்ப வாரங்களில் உரிய உபகரணங்கள் மற்றும் நூல்கள் இல்லாமையினால் நிறுவனத்தின் வேலைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. நிறுவனத்தில் இருந்தவற்றைக் கொண்டு நூல் திரித்தல், சாதாரண வலைகள் பின்னுதல் போன்ற வேலைகளே நடைபெற்று வந்தன.

கடந்த 13 ஆம் திகதி 2 லட்சத்து 28 ஆயிரம் பெறுமதியான நூல் மற்றும் இயந்திரங்களிற்குப் பாவனைப்படுத்தும் எண்ணெய் பொருள்கள் என்பன வந்து சேர்ந்துள்ளன.

பொருள்கள் வந்த மறுநாளான 14 ஆம் திகதியே உடனடியாக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்றும் - தற்போது வேலைகள் நடைபெற்று வருகின்றன என்றும் - நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது வந்துள்ள பொருள்கள் சில தினங்களில் முடிவடையும் என்று அவர் அடுத்த சில வாரங்களில் 6 லட்சத்து 45 ஆயிரத்து ரூபா பெறுமதியான ஆயிரத்து 500 கிலோ எடையுள்ள நூல்கள் கொழும்பில் இருந்து சீநோருக்கு எடுத்துவரப்படவுள்ளன என்றும் தெரிவித்தார். (ட-6)

## யாழ். நூலகக் கட்டுமானப் பணி விரைவில் பூர்த்தியாகிவிடும்

### பிரதம பொறியியலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ். பொது நூலக இறுதிக்கட்ட பணிகள் மிக விரைவில் பூர்த்தியாகும் என வடபிராந்திய கட்டடத் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் க.தேவராஜா தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நூலகத்தின் கட்டுமானப் பணிகள் தற்போது 75 வீதம் பூர்த்தியாகிவிட்டன. நூலகத்திற்கு தேவையான சில முக்கிய கட்டடங்களின் கட்டுமானப்பணிகளே தற்போது இடம்பெற்று வருகின்றன.

யாழ்.பொது நூலகத்தில் கடந்த மே மாதம் முதல் ஒருகோடி 50 லட்சம் ரூபா செலவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நூலகத்திற்கான சிற்றுண்டிச் சாலை, மின் பிறப்பாக்கி வைப்பதற்கான கட்டடம், நூலகத்தின் நடுப்பகுதியில் உள்ள இடைவெளியில் வாகனங்கள் சென்று வரக்கூடிய வகையிலான நடைபாதைக் கட்டம் மற்றும் மின் உயர்த்தி ஆகியவை அமைக்கப்பட்டு வருகின்றன. இப்பணிகள் விரைவில் பூர்த்தியாகிவிடும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. சிற்றுண்டிச் சாலைக்கான கட்டுமானப்பணி ஓரிரு மாதங்கள் தாமதமாகக் கூடும் என்றார் அவர். (ஒ-6)

## அழகுக்கலை கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.21

திருமலையில் இயங்கும் 'போஷ்' (POSH) அழகுக்கலை நிறுவனம் யாழ்ப்பாணத்தில் நடத்திய அழகுக்கலைப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு பயிற்சிபெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் மற்றும் விசேட அழகுக்கலை செயன்முறைக் கருத்தரங்கும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் நல்லூர் கப்நகர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன.

(ஜ)

# சுகாதார நடைமுறைகளை முறைப்படி பின்பற்றுங்கள்!

## தமிழீழ சுகாதார சேவை அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.21

பருவமழை ஆரம்பித்திருப்பதை அடுத்து சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக முறைப்படி பின்பற்றுமாறு தமிழீழ சுகாதார சேவையின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு வேண்டியுள்ளது.

இது குறித்து மேற்படி பிரிவினால் 'தொற்று நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஆலோசனைகள்' என்ற தலைப்பில் அறிவுறுத்தல் குறிப்பு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிவுறுத்தல் குறிப்பு வருமாறு:-

தற்போது மழைகாலம் ஆரம்பித்து விட்டதால் தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற மழையினால் எங்கும் நீர் தேங்கிக் காணப்படுகின்றது. இதனால், எமது பிரதேசங்களில் தொற்று நோயகள் மற்றும் மலேரியாக்காய்ச்சல் என்பன பரவக்கூடிய ஏதுநிலை காணப்படுகின்றது. எனவே, எம்மை இந்நோய்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வது அவசியமாகும். ஆதலால், தனிநபர் சுகாதாரத்தைப் பேணுவதுடன் எமது சூழலையும் சுத்தமாக வைத்திருப்பதால் எம்மை தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்கலாம். எனவே, பின்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

☆ நன்கு கொதித்தாறிய நீரைப் பருகுவோம்.

☆ வீட்டிலும் எமது சுற்றாடலிலும் குப்பை கூளங்களை கண்டகண்ட இடங்களிலெல்லாம் போடாது அதற்கென குழி அமைத்து அதனுள் போடவும்.

☆ முடிந்தவரை மழை நீரைத் தேங்க விடாது பேணவும். இதனால், நுளம்புகள் பெருகுவதைத் தடுக்கலாம்.

☆ கோம்பைகள், சிரட்டைகள், பேணிகள், ரயர்கள், நீர் தேங்கக் கூடிய பொலித்தீன்கள், பழைய வெற்றுப்பாத்திரங்கள் போன்றவற்றை புதைக்கவும் அல்லது மழை நீர் தேங்காத வகையில் வைக்கவும். (இது வீடுகள், வர்த்தக நிலையங்கள், வாகனத்திருத்தகங்கள், உணவகங்கள் மற்றும் பொது இடங்கள் என்பனவற்றுக்கும் பொருந்தும்)

☆ தேங்கும் மழைநீரில் குழந்தைகளை விளையாட விடாதீர்கள். இதன மூலமும் நோய்க்கிருமிகள் உடலினுற் சென்று நோய்களை ஏற்படுத்துவதுடன், தோல்நோய்களையும் ஏற்படுத்தலாம்.

☆ வீதியோரங்களில் வைத்து விற்கப்படும் உணவு வகைகளை வாங்கி உண்ணாதீர்கள்.

☆ சமைப்பதற்குப் பயன்படுத்துகின்ற காய்கறிகளைச் சமைப்பதற்கு முன்பு நன்கு சுத்தமாகக் கழுவுதல் வேண்டும். அத்துடன், பச்சையாக உட்கொள்வதனைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

☆ சமைப்பதற்கு முன்பும் உணவு பரிமாறுவதற்கு முன்பும் குழந்தைகளுக்கு உணவூட்டமுன்பும் மலம் கழித்த பின்பும் கைகளைச்சவக்காரமிட்டுக் கழுவுதல் அவசியமாகும்.

☆ சமைப்பதற்குப் பயன்படுத்துகின்ற பாத்திரங்களையும், உணவு உட்கொள்ளப் பயன்படுத்துகின்ற பாத்திரங்களையும் கொதிநீர், 'விம்' கொண்டோ நன்கு கழுவியபின் பயன்படுத்துதல் வேண்டும்.

☆ சமைத்த உணவுகளை இலையான்கள் மொய்க்காது மூடிவையுங்கள்.

☆ சிறு குழந்தைகளுக்கு புட்டிப் பால் ஊட்ட முன்னர் பாற்போத்தல், பால் தயாரிக்கப்பயன்படுத்தப்படும் பாத்திரங்கள், பாற்சூப்பி போன்றவற்றை சுடுதண்ணீர் கொண்டு கழுவுங்கள்.

(குழந்தைகளுக்குப் பாலூட்டும் போத்தல் சூப்பி என்பனவற்றில் பற்றீயாக்கிருமிகள் நன்கு வளர்வது ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இவை வயிற்றோட்டம் நெருப்புக்காய்ச்சல் போன்ற தீய விளைவுகளை ஏற்படுத்தக்கூடியான)

☆ ஒவ்வொரு வேளையும் சூடான உணவுகளை உட்கொள்ளுங்கள். சூடாறிய உணவுகளை உண்ண முன் சூடாக்கிய பின்னர் உண்பது சிறந்தது.

☆ பாதுகாப்பான முறையில் மலங் கழியுங்கள். தனியான மலசலகூட வசதி இல்லாதவர்கள் மலத்தினை வெட்டிப்புதைப்பது அவசியமாகும்.

☆ உங்களில் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய அசாதாரண அறிகுறிகள் (காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற) காணப்படின் அலட்சியப்படுத்தாது வைத்திய ஆலோசனையை பெறுவதுடன் அயலில் உள்ள சுகாதார உத்தியோகத்தருக்கோ, தமிழீழ சுகாதார சேவையினருக்கோ அறிவியுங்கள்.

☆ சுகாதார சீர்கேடாக இருக்கும் உணவு விற்பனை இடங்கள் மற்றும் இடங்கள் பற்றிய தகவல்களை எமக்கு அறியப்படுத்துங்கள் - என்று அதில் உள்ளது. (எ)

# கந்தரோடையில் நாளை சைவத்திருமுறை விழா

வலிகாமம் தெற்கு,நவ.21

உடுவில் கல்விக்கோட்ட வருடாந்த சைவத் திருமுறை விழாவும் பரிசளிப்பு வைபவமும் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி முருகன் ஆலயத்தில் இன்று திருமுறைச் சுவடிகள், சமயகுரவர் பாடல்கள், ஆறுமுகநாவலர் படம் என்பன ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுததுவரப்படும்.

வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன், சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்,முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு.சண்முகநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

கடல் கடந்த நாடுகளில் சைவசமய கலாசாரம் என்ற விடயம் பற்றி முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் சிறப்புரையாற்றுவார்.

மாணவர்களின் பண்ணிசை, கதாப்பிரசங்கம், பரிசு வழங்கல் என்பனவும் இடம்பெறும். (எ-152)

## கலாசார விழா

வலி.தெற்கு,நவ.21

அளவெட்டி, இளவாலை, பனாலை கிராமங்கள் இணைந்து நடத்தவுள்ள கலாசாரவிழா டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை இதனை நடத்தவுள்ளது.

இக்கலாசார விழாவை நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று இம்மாதம் 26 ஆம் திகதி கலாசார பேரவைத் தலைவர் வை.சுப்பிரமணியம் தலைமையில் பிற்பகல் நான்கு மணிக்கு நடைபெறவுள்ளது.

சகலரையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வலி.வடக்கு கலாசார உத்தியோகத்தர் மா.அருள்சந்திரன் கேட்டுள்ளார். (எ-152)

## கூட்டுறவுச் சமாசத்தில் மாவீரர் எழுச்சி நிகழ்வு

மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத்தின் தலைவர் ப. கனகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி யாழ் மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் சி. விரிதரன் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும் - யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கனகசபாபதி சிறப்பு அதிதியாகவும் கலந்துகொள்வர்.

பொதுச்சுடர் ஏற்றல், தேசியக் கொடி ஏற்றல், ஈகச் சுடரேற்றல் என்பனவும் இடம்பெறும். (எ-6)

# சத்திய சாயி பாபாவின் அவதார தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.21

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா அவதார தினம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5மணிமுதல் திருநெல்வேலியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அதிகாலை 5மணிமுதல் ஓம்காரம், சுப்ரவாதம், நகர சங்கீர்த்தனம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் காலை 10மணிக்கு இன்னிசைவிருந்து இடம்பெறும். காலை 10.45 மணிக்கு யாழ்மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜாவின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

பிற்பகல் நிகழ்வுகள் 2.15 மணிக்கு ஆரம்பமாகும். வாத்ய இசை விருந்து, நடனம், நாடகம் போன்ற கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (எ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ.21

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின 78 ஆவது பிறந்ததின விழாவும் நயினாதீவு பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா பூர்த்தி விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நயினாதீவு மகாவித்தியாலத்தில் நடைபெறவுள்ளது. முன்னதாக இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பகவானின் படம் ஊர்வலமாக அப்பகுதியெங்கும் எடுத்துச் செல்லப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ.21

பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின 78 ஆவது பிறந்ததின விழா சண்டிக்குழி சாயி நிலையத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

அன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கும் இவ்விழாவில் 'பகவானின் அற்புத லீலைகள்' படக்காட்சியும் மு.சிவலோகநாதன் 'இன்றைய வாழ்க்கைக்கு உகந்த போதனைகள்' என்னும் தலைப்பிலான சொற்பொழிவு மற்றும் பஜனை என்பன இடம்பெறும். (எ-30)

## கிளினிக்குக்கு வந்த வயோதிபப்பெண் மரணம்!

யாழ்ப்பாணம், நவ.21

தேநீர்க்கடையொன்றினுள் தேநீர் குடிப்பதற்காகச் சென்ற வயோதிபப் பெண்ணொருவர் திடீரென விழுந்து மரணமானார்.

யாழ்ப்பாணம் பஸ்நிலையப் பகுதி கடையொன்றினுள் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியைச் சேர்ந்த சச்சிதானந்தம் பொன்னுப்பிள்ளை (வயது78) என்பவரே இவ்வாறு மரணமானார்.

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று நடைபெற்ற கிளினிக்கில் பங்குபற்றிவிட்டு தேநீர் அருந்துவதற்காக சென்றிருந்த சமயமே மரணம் சம்பவித்ததாக கூறப்பட்டது.

மரண விசாரணைகளை அடுத்து அவரது பூதவுடல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (எ-6-15)

## மனித உரிமை தினத்தை முன்னிட்டு கவிதைப்போட்டி

யாழ்ப்பாணம்,நவ.21

தேசிய மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்ட ரீதியில் கவிதைப்போட்டியை நடத்துவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினம் நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதன் ஒரு கட்டமாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம கவிதைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

'யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள்', 'சிறுவர் உரிமைகள்', 'பெண்கள உரிமைகள்' மற்றும் 'இடம்பெயர்ந்து வாழ்வோரின் நலன்களை பேணுடல்' என்ற தலைப்பில் ஏதாவது ஒன்றைப்பற்றி கவிதைகளை ஆக்கி எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாக 'உள்ளூர் இடம்பெயர்ந்தோர் நலத் திட்டப்பிரிவு' மனித உரிமைகள் ஆணைககுழு யாழ்.அலுவலகம், சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அலுவலர் வ.வேழினி கேட்டுள்ளார்.


# மரண அறிவித்தல்கள்

திருமதி

**கெங்காதரன் சீதாதேவி**

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வற்றாப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட கெங்காதரன் சீதாதேவி 19.11.2003 அன்று காலமானார்.

அன்னார் டாக்டர் ரி.கெங்காதரன் அவர்களின் அன்புத் துணைவியாரும் டாக்டர் சந்திரிக்கா தங்கராசா (அவுஸ்திரேலியா), திருமதி சுலோச்சனா புகானந்தன், ஹரிச்சந்திரன், நாகேந்திரன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாநிதி ஜெயசிதம்பரநாதன், சிவபாக்கியம் பசுபதி, ரி.பத்மநாதன், திருமதி அமலாதேவி சண்முகராசா, ரி.விஸ்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கராசா,காலஞ்சென்ற புகானந்தன், திருமதி சுலோச்சனா ஹரிச்சந்திரன், திருமதி றஞ்சினி நாகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் வொருஜினி, அர்ச்சனா, சஞ்சீவன், கேமலதா, நிருசன், கிஷோஸ், அருண், சிவகாமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2003) சனிக்கிழமை 11.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
டாக்டர்
கெங்காதரன் (கணவர்).

(C-31419) (33-11-12-16)

திருமதி

**சச்சிதானந்தம் (குமார்) பொன்னுப்பிள்ளை**

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி பாற்பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தம் (குமார்) பொன்னுப்பிள்ளை நேற்று 20.11.2003 இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சச்சிதானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி, கௌரீஸ்வரி (கொழும்பு), புவனேஸ்வரி (கனடா), சிறீகாந்தா (தபால் தரம்பிரிப்பாளர், யாழ். தபாலகம்), புலேந்திரன் (வவுனியா), நாகேஸ்வரன் (ஈசன் இயந்திரவியலாளர்), கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, பெனோ (பிரான்ஸ்), தவராசா (கனடா), ஞானாம்பிகை, ஜெயா, பிறேமலதா ஜெயக்குமார் (தயா அச்சகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 4.00 மணிக்கு கோண்டாவில் கட்டை ஆவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*No. 131, பாற்பண்ணை வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பிள்ளைகள்.

(27927) (33-11-12-16)



# கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையின் நீண்ட கால சிரேஷ்ட வைத்தியர்
டாக்டர் கெங்காதரன்
அவர்களின்
பாசமிகு துணைவியார்
திருமதி சீதாதேவி கெங்காதரன்
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்ப துயரில் நாமும் பங்கெடுப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த தனியார் மருத்துவமனை,*
*கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு.*

பணிப்பாளர்,
வைத்தியர்கள்,
பணியாளர்கள்.

(24926) (32-11-12-16)



ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல்
அஜித், மீராஜஸ்மின், கபாலி மற்றும் பலர் நடித்த
ஆஞ்சநேயா
காட்சிகள்: 10.30,2.30,6.30,9.30(பு.நே.)

லஷ்சுமி சினிமா இணுவில்
இன்று முதல்
ரஜனி மீனா கவுண்டமணி, செந்தில் நடித்த
எஜமான்
10.30, 2.30, 6.30, (பு.நே.)

நிறைஞ்சனாஸ் சுன்னாகம்
ராஜேஸ், ஸ்ருதிகா நடித்த
அல்பம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இந்த
DOUBLE JEOPARDY

லிபேட்டி அச்சுவேலி
சரத்குமார், தேவயானி, வடிவேல், மணிவண்ணன் நடித்த
ஒருவன்
காட்சி நேரம்: 3.00, 7.00.

நாகம்ஸ் சுன்னாகம்
23 ஆம் திகதிவரை இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண், விவேக் நடித்த தினசரி காட்சிகள்.
3.00 7.00 பு.(நே.)
அடுத்த சிலதினங்களில் பார்த்திபன் கனவு

(C/31060)(12)

# உடதலவின்ன படுகொலை வழக்கு: மேல் விசாரணைக்காக ஒத்திவைப்பு

கொழும்பு,நவ.21

உடதலவின்ன படுகொலைகள் வழக்கின் இரண்டாம், மூன்றாம் சந்தேகநபர்களான லொஹான் ரத்வத்த, சானுக ரத்வத்த ஆகியோரை குற்றப் புலனாய்வு அதிகாரி லிண்டன் ரத்நாயக்க, 2000ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி என் முன் ஆஜர் செய்தார். அப்போது சிறை அதிகாரி ஒருவரும உடன் இருந்தார்.

உடதலவின்ன படுகொலைகள் சம்பந்தமான வழக்கு விசாரணையின் போது நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் சாட்சியமளித்த தெல்தெனிய மஜிஸ்திரேட் பிரிதி இனோகா ரணசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் எரிக் பசநாயக்க (தலைவர்), தீபாலி விஜயசுந்தர, சுனில் ராஜபக்ஷ ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின்போது சாட்சியை எதிர்த்தரப்பு சட்டத்தரணி திரந்த வரலியத்த குறுக்கு விசாரணை செய்தார்.

சாட்சி தனது சாட்சியத்தின் போது மேலும் தெரிவித்ததாவது:-

தெல்தெனிய நீதிமன்றத்திற்கு வழக்கின் இரண்டாம், மூன்றாம் சந்தேக நபர்களான லொஹான் ரத்வத்த, சானுக ரத்வத்த ஆகியோர் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதியன்று மூடப்பட்ட வாகனமொன்றில் கொண்டுவரப்பட்டனர். ஆனால், இவர்கள் கொண்டு வரப்படுவார்கள் என்று முன்னர் நான் அறிந்திருக்கவில்லை.

லொஹான், சானுக ஆகியோருக்கு போதிய பாதுகாப்பு இல்லையென போகம்பரை சிறைச்சாலை அதிகாரி சந்தன ஏக்கநாயக்க என்னிடம் தெரிவித்தார்.

அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளித்து மார்ச் 2ஆம் திகதி வரை சிறைச்சாலையில் வைத்திருக்கும்படி நான் உத்தரவிட்டேன்.

மேற்படி படுகொலை தொடர்பான விசாரணையை 2001ஆம் ஆண்டு டிசெம்பர் 8ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பொறுப்பேற்றனர். அந்தக் காலகட்டத்தில் நான் தெல்தெனிய நீதிவானாக இருக்கவில்லை.

பத்தாம், பதினோராம் சந்தேகநபர்களை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் உடுகம்பொல, 2001ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்தார்.

உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் உடுகம்பொல தலைமையில் விசாரணைக் குழுவொன்று இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையில் ஈடுபட்டிருந்தது. அதற்கு இராணுவத்தின் உதவியும் வழங்கப்பட்டது.

மேற்படிக் கொலைச் சம்பவம் சம்பந்தமாக பல தடயப்பொருள்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், இரண்டு டிபெண்டர் வாகனங்களும் என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை.

- இவ்வாறு நீதிவான் சாட்சியமளித்தார். 2001ஆம் ஆண்டு டிசெம்பர் 5ஆம் திகதி பொதுத் தேர்தல் தினத்தன்று கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த உடதலவின்ன என்ற இடத்தில் 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 16 பேர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கில் முதலாவது எதிரி முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த என்பது குறிப்பிடத்தக்கது.

விசாரணை எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

## திடீர் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரவு - செலவுத் திட்டத்தின் முழுமையான பயன் மக்களைச் சென்றடைய வேண்டுமாயின் இந்த நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டி பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். இன்று சமாதானம் என்ற வண்டியை செலுத்திச்செல்ல சாரதியற்ற ஒரு நிலை உருவாகியுள்ளது. அந்த நிலையை நீக்கி நிலையான சமாதானத்தை நோக்கிய முயற்சிகளை மீண்டும் முன்னெடுக்கவேண்டும்.

இன்றைய நிலையில் இயலுமான வரையில் மக்களுக்குச் சாதகமானவொரு வரவு - செலவுத்திட்டத்தை அறிமுகப்படுத்திய நிதியமைச்சர் கே.என்.சொக்ஸிக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலை காரணமாக ரூபாவின் பெறுமதி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏற்றுமதிப் பொருள்களின் விலை அதிகரிப்பை வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக கட்டுப்படுத்த முடியாது.

இதனால் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும்.

எனவே சமாதானத்தை கட்டியெழுப்புவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வை நோக்கியதான ஸ்திரமான ஒரு திட்டத்தை எடுத்துச் செல்ல வேண்டும்.

இப்படி அவர் தெரிவித்தார்.

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள நிகழ்ச்சி நிரலில் எதிர்வரும் 25 ஆம் திகதி நோர்வே தூதர், கண்காணிப்புக் குழுவின் உப தலைவர், ஜனாதிபதி, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் ,அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், டிரோன் பெர்னாண்டோ, மிலிந்த மொறகொட ஆகியோரை கிறிஸ் ப்ற்றன் சந்திப்பார்.

மறுநாள் காலை ஹெலி மூலம் கிளிநொச்சிக்குச் செல்லும் அவர் அங்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோரைச் சந்திப்பார்.

அதன் பின் கொழும்பு திரும்பும் அவர் இந்தியத் தூதுவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை சந்தித்து கலந்துரையாடுவார். அன்று மாலை செய்தியாளர் மாநாடு ஒன்றையும் நடத்துவார்.

பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான நெருக்கடிகளுக்கு முடிவு கண்டு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் வழிவகைள் குறித்து இவர் முக்கியயமாக ஆராயவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-3)

## மட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக்கொண்டதுடன் தற்போதைய சூழ்நிலையில் இதுவே அவசியம் என்றும் வலியுறுத்தினர்.

கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப்படை தளபதி ஏயார் வைஷ் மார்ஷல் டொனால்ட் வீரக் கொடி ஆகியோர் விசேட ஹெலிக்கொப்டரில் மட்டக்களப்புக்குச் சென்றிருந்தனர்.

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள 233ஆவது படைப்பிரிவுத் தலைமையகத்தில் சுமார் 3 மணி நேரம் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் முப்படைத் தளபதிகள் உரையாற்றினர்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்ற பின்னர் முப்படைத் தளபதிகள் மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவாகும். (எ-4)

## மாவீரர் அலங்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு வந்த படையினர் அலங்கார வளைவுகளை அமைக்கவேண்டாம் என்று கூறி பொதுமக்களைத் தடுத்தனர் என்று கூறப்படுகின்றது. இதனால் படையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த தென்மராட்சிக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அப்பகுதி இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர். இந்த விடயம் தொடர்பாக கண்காணிப்புக் குழு முன்னிலையில் பேசுவதெனத் அப்போது அவர்கள் தீர்மானித்தனர்.

இத்தீர்மானத்திற்கமையவே நேற்று கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

மாவீர்தின வளைவுகளை அமைப்பதற்குப் படையினர் தடைகளை ஏற்படுத்தமாட்டார்கள் எனவும் கடந்த புதன்கிழமை மீசாலையில் இடம்பெற்றது போன்ற சம்பவங்கள் இனிமேல் ஏற்பட அனுமதிக்கப்படமாட்டாதெனவும் படை அதிகாரிகள் அங்கு உறுதியளித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இக்கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ் மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ்மாவட்டபடைகளின் பிரதித்தளபதி பிரிகேடியர் இரத்தின சபாபதி, யாழ் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஹெங்டந்ர மசிறி ஆகியோரும் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ஐ-8)

## அரசியல் மோதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றார்.

இலங்கைப் பிரதமரும், ஜனாதிபதியும் முதலில் தமக்கிடையிலான அரசியல் போட்டியைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் உள்நாட்டு அரசியல் நெருக்கடியில் சிக்கிக்கொள்ள விரும்பவில்லை என்பதாலேயே சமாதானப் பணியை இடைநிறுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்ட நோர்வே பிரதியமைச்சர் மேலும் கூறியிருப்பதாவது:-

"இச்சமாதான முயற்சி இலங்கையர்களுக்குச் சொந்தமானது அவர்களாலேயே அது மேற்கொள்ளப்பட வேண்டும். எமக்கான எல்லைகள் எவை என்பதை தெளிவுபடுத்துவது அவசியமானதாகும். அவ்வாறானால், எம்மீது பெரும் எதிர்பார்ப்புகள் சுமத்தப்படமாட்டா.

போர்நிறுத்தம் உடனடியாகத் தடம்புரளக் கூடிய ஆபத்து இல்லை.

ஆனால், இந்த நிச்சயமற்ற நிலை நீண்டகாலத்துக்குத் தொடருமேயானால், சிறிய சம்பவங்கள் கூட பெரும சம்பவங்களாக வெடிக்கும் ஆபத்து உண்டு.

அரசியல் சமரசப் பேச்சு இல்லாத நிலையில், போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பேணி வருவது மிகவும் கடினமானதாகும். அதுவே, அடிப்படையில் எமக்குள்ள கவலை, அது ஒரு மிகவும் பாரதூரமான நிலை. ஆயினும், ஆபத்தான நிலையல்ல. ஏனெனில், போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. களத்தில் நிலைவரம் அமைதியாக உள்ளது.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் டோக்கியோ மாநாடு 4500 கோடி டொலர்கள் உதவிகளை வழங்க உறுதியளித்தது. இலங்கை அரசியல் நெருக்கடி இழுத்துக்கொண்டு செல்லுமேயானால் இந்த நிதியுதவி பாதிக்கப்படலாம்.

காத்திருந்து பார்க்கும் நிலையையே உதவி வழங்கும் நாடுகள் கடைப்பிடிக்கின்றன. ஆயினும், உயிரோட்டமுள்ள தொடந்து செல்லும் ஒரு சமாதான நடைமுறையை ஆதரிப்பதே அந்நாடுகளின் விருப்பமாகும். இவ்வாறு அவர் கூறியிருக்கிறார்.

## தமிழ் தேசிய சேவை வடக்குக்கு விஸ்தரிப்பு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் தேசிய சேவை நிகழ்ச்சிகள் இன்று முதல் வடக்கு மக்களுடன் இணையவிருக்கின்றன.

ஈரப்பெரிய குளத்தில் உள்ள உப நிலையம் ஊடாக மத்திய அலை வரிசை 855கிலோ ஹேட்ஸ் ஊடாக வடக்கு மக்கள் இந்த நிகழ்ச்சிகளைக் கேட்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்ஸன் சமரசிங்க எடுத்த நடவடிக்கைகளின்படி இந்த அலைவரிசை விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மண்டபம் புனரமைப்பு

யாழ். மத்திய கல்லூரியின் "றொமெயின் ஹோல்" புனரமைக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணத்தில் கடந்த இரு தசாப்த காலத்துக்கு மேல் நடைபெற்ற யுத்தம் காரணமாக இக்கட்டடம் பாரிய சேதமடைந்தது. மாடிக்கட்டடத்தைக் கொண்ட இக்கட்டடத்தின மேல்மாடி சேதமடைந்த நிலையிலுள்ளது. (எ-51)

## சிறப்புற நடைபெற்ற ஆண்டு விழா

கிளிநொச்சி,நவ.29

புலிகளின் குரல் வானொலியின் 13ஆம் ஆண்டு நிறைவு தின நிகழ்வு நேற்று மாலை சிறப்பாக நடைபெற்றது. புலிகளின் குரல் நிறுவன மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொது ஈகச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைத்தார்.

புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழ்அன்பன் நிகழ்வுக்கு தலைமை வகித்தார்.

சிறப்புரையினை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் நிகழ்த்தினார். கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வானோசை 14 கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கையெழுத்திட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (எ-4)

## ஜனாதிபதிக்கும் பிரதம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றைத் தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலையைப் போக்கி ஸ்திரமான ஒரு நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தினதும், பொறுப்பு வாய்ந்த எதிர்கட்சியினதும் கடப்பாடாகும் எனவும் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

பொருளாதார அபிவிருத்தியும், சமாதானமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைக்கப்பட்டவை. எனவே, சமாதானம் இல்லையேல் பொருளாதார அபிவிருத்தி இல்லை என்பதை எதிர்க்கட்சியினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இன்று பட்ஜெட் விவாதத்தினை ஆரம்பித்துப் பேசிய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரின் கருத்துகளும் இதனையே வலியுறுத்தி உள்ளன.

கடந்த வாரம் ஜனாதிபதியும் பிரதமரும் சந்தித்து திறந்த மனதுடன் பேசினர். நாட்டில் நிரந்தர சமாதானத்தையும் - பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்காக பொதுவான கொள்கைத்திட்டம் ஒன்றை வகுக்க வேண்டிய அவசியத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த அடிப்படையில் ஜனாதிபதியின் சார்பில் அவரது செயலாளர் கருணாரத்ன, ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல அரசாங்கத்தின சார்பில் ஐ.தே.க.நவிசாளர் மலிக் சமர விக்கிரம, பிரமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது.

மலிக் - தித்தவெல குழு என்று அழைக்கப்படும் இக்குழுவின் உறுப்பினர்கள் நேற்றுக் காலை கூடி இவ் விடயங்கள் தொடர்பாகப் பரிசீலனை செய்தனர். ஜனாதிபதியும் - பிரதமரும் அடுத்த சந்திப்பின்போது பேசவிருக்கும் விடயங்கள் தொடர்பான ஆவணையை அவர்கள் தயாரிப்பார்கள்.

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளது. இதன் மூலம் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டுள்ளார். அதனால் தான் சமாதானப் பேச்சுக்களைப் பிரதமரே தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று அவர் வலியுறுத்துகின்றார்.

ஆயினும், சமாதானப் பேச்சும் - பாதுகாப்பும் பிரிக்க முடியாதவை எனவும் சமாதானப் பேச்சைத் தொடர வேண்டுமானால் அது தொடர்பான சகல அதிகாரங்களும் தமக்கு வழங்கப்படவேண்டும் எனவும் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு யார் பொறுப்பு என்பது திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் கூறிவிட்டார்.

அரசியல் ஸ்திரமற்ற நிலையிலேயே நோர்வே அனுசரணையாளர்கள், தற்காலிகமாக தமது பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டனர். இப்படியான ஒரு நிலையில் தென் இலங்கையில் அரசியல் ஸ்திரநிலையை உருவாக்குவதற்கு எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

முன்னைய அரசின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியுடன் 'கியம்போக்' உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டார். அதே போன்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இப்பொழுது இணைந்து செயல்பட விரும்புகின்றோம். அதற்கு அடித்தளமிடும் வகையிலேயே பிரதமர் அமைச்சரவை கண்காணிப்புக் குழுக்களின் தலைமைப் பொறுப்புக்களை எதிர்க்கட்சிகளுக்கு வழங்க முன்வந்தார். ஆனால், எதிர்க்கட்சிகள் அவற்றின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை.

தென் இலங்கையில் அரசியல் ஸ்திரநிலை ஏற்படுவதற்கு தேசிய அரசாங்கம் தான் வழி என்பதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. அதனை நிராகரிக்கின்றோம்.

புலிகள் இடைக்கால நிர்வாகம் தொடர்பான ஆலோசனைகளை முன்வைத்துவிட்டு நேரடிப் பேச்சுக்காக காத்திருக்கின்றனர். சமஷ்டி முறையையும், அதிகாரப் பகிர்வையும் ஜனாதிபதியும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினரும் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஆனால், அதிகாரத்தை எப்படிப் பகிர்வது, எந்த அதிகாரத்தை வழங்குவது என்பதே பிரச்சினை. இவற்றைப் பேசியே தீர்க்க வேண்டும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

ஜனாதிபதியுடனான பிரதமரின் அடுத்த சந்திப்பு நல்லதொரு திருப்பத்தை ஏற்படுத்தும் எனவும் அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

## மாவீரர் எழுச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றிலும் தேசியக்கொடியேற்றும் நிகழ்வுகள் நடைபெறும். மாவீரர்களின திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலிகளும் இடம்பெறும்.

மாவீரர் நாளை எழுச்சியுடன் கொண்டாடும் வகையில் வீதிகளில் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மஞ்சள், சிவப்புக் கொடிகளால் வீதிகள் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இன்று முதல் நான்கு நாள்கள் சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. வீதிகள், பொதுஇடங்கள் துப்புரவு செய்யப்படவிருக்கின்றன. தமது வீடுகளுக்கு முன்பாக உள்ள வீதிகளை மக்கள் துப்பரவு செய்யும் பணிகளில் ஈடுபடுவர். (எ-3-7-6-30-86-135-75)


சுவிஸ் PERLYN CARGO SERVICES
மிகக்குறைவான கட்டணத்தில்
சுவிஸிலிருந்து கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்துக்கு.....
CHF 100 மட்டுமே!
மாதாமாதம் பொதிகளை அனுப்பி (80X60X60) வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்.
Limmatstrasse 213
8005 Zurich
Tel: 01/44071 15
Fax:01/44071 17
விசேட விலைக் கழிவில்..... சுவிஸ் - கொழும்பு சென்று வர விமான டிக்கட் Including 35 Kg Baggade CHF 1140 மட்டுமே!
(எ-31229)(24-36)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு சரளமாக உரையாட சிங்களம்
By லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்:22-11-2003 Sat.-4.00 p.m.
(24870) (12-)

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.
A/L INORGANIC CHEMISTRY
Sat, Sun. 10.00 - 12.00 a.m.
BY: அன்பழகன் (24915) (30)

IBM, DELL, COMPAQ கணனிகள்.
ரூ15,000/- இருந்து
ஏன் நாம் உலகத்தரமான வற்றை வழங்குகின்றோம்?
1. குறைந்த செலவு
2. நீடித்த பாவனை. (7 வருடம்)
3. கையாள்வதில் இலகுவானது,
என்பன போன்ற வலுவான காரணங்களுடன் எமது உத்தரவாதத்துடன் இலவச சேவையையும் உள்ளடக்கியது.
STP Your Partner in Technology
73, Palaly Road, Kantharmadam, Jaffna
T.P:021 222 2874


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.